Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 09 புதன்கிழமை (26.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 334

### பொ.ஐ.மு. தலைவர்களின் கூட்டத்தில் நேற்று

# பிரதமர் மஹிந்தவுக்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகா காட்டம்!

## கட்சிக் கொள்கைகளை விற்றுவிட்டு இனவாதம் பேசுகிறார் எனச் சீற்றம்

கொழும்பு, ஒக்ரோபர் 26

**"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டிருக்கும் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, இனவாதிகளினதும், அடிப்படைவாதிகளினதும் கைப்பொம்மையாகிவிட்டார். ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் கொள்கைகளில் சிக்காமல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைத் தாம் முன்னெடுப்பார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எழுத்துமூலம் எனக்கு உத்தரவாதமளிக்க வேண்டும். அப்படி அவர் உத்தரவாதமளித்தால் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்குவேன். இனவாதக் கொள்கை கொண்ட ஜனாதிபதி வேட்பாளரொருவரின் தேர்தலுக்கு ஆதரவான பிரசாரத்தை நாம் எப்படி மேற்கொள்ளமுடியும்?"**

**- இவ்வாறு காட்டமான கருத்துக்களுடன் கேள்வியெழுப்பினார் ஜனாதிபதி சந்திரிகா**

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்களையும், முக்கிய உறுப்பினர்களையும் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து மூன்று மணிநேரம் கலந்துரையாடினார் ஜனாதிபதி. அப்போது தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து விரிவாக ஆராய்ந்த ஜனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள 'மஹிந்தவின் சிந்தனை' தேர்தல் விஞ்ஞாபனம் குறித்துக் காரசாரமாக விமர்சித்தார்.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, சுசில் பிரேம்ஜயந்த, ஏ.எச்.எம்.பௌசி, நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன, டியூ குணசேகர, டி.எம்.ஜயரட்ண பேராசிரியர் திஸ்ஸ

(16ஆம் பக்கம் பார்க்க)

## குகதாசனுக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்

கிளிநொச்சி,ஒக்.26

மூத்த கல்விமானும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆகிய தேசியக் கல்லூரிகளின் முன்னாள் அதிபருமாகிய கே.எஸ்.குகதாசனுக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவத்தை விடுதலைப் புலிகள் வழங்கியுள்ளனர். இந்தக் கௌரவம் தொடர்பான அறி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத் தளபதியின் பதவிக்காலம் நீடிப்பு

கொழும்பு, ஒக்.26

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொடவின் பதவிக்காலம் மேலும் இரண்டு ஆண்டுகளால் நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை ஜனாதிபதி நேற்று விடுத்திருக்கிறார் என அறியவருகிறது.

இந்த உத்தரவினால், இராணுவத் தளபதிக்கு அடுத்து இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி பதவியில் உள்ள மேஜர் ஜெனரல் சரத் பொன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மின்சாரம் தாக்கி இரு பெண்கள் பலி!

கொழும்பு,ஒக். 26

மின்சாரத்தினால் தாக்குண்டு இளம் பெண்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மன்னார் மூர் வீதியில் நேற்று மதியம் 1.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது எம். ஏ. சம்ரீனா (வயது 24), எஸ் .எச். எம். நுஸ்திவாபானு (வயது 20) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

வீட்டிலுள்ள 'அன்ரனா' சரிந்து மின் கம்பி

(16ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிக்குள் தனக்கு எதிராகவே சதி நடக்கிறது என்கிறார் அநுர!

### ஜனாதிபதிக்கு அது குறித்துக் கடிதம்

கொழும்பு,ஒக்.26

ஜனாதிபதிக்கும் தனக்கும் எதிராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே சதி இடம்பெறுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் வெளிவிவகார அமைச்சரும் கட்சியின் பிரதமர் வேட்பாளராக முன்மொழியப்பட்டவருமான அநுர பண்டாரநாயக்க.

இது தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய விரிவான கடிதம் ஒன்றை அவர் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

சுதந்திரக் கட்சிக்கே உரிய பிரதமர் பதவியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் வேறு கட்சியினருக்கு வழங்குவதற்குத் தமது கட்சியில் உள்ள சிலரே சதி செய்கின்றனர் என்றும் அநுர தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலிய துறைக்கு அமைச்சு உருவாக்கம்

கொழும்பு,ஒக்.26

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையின் கீழ் இயங்கும் வகையில் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு என்றொரு புதிய அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

தற்போதைய பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகம இந்த அமைச்சின் செயலாளராக பணியாற்றுவாரென ஜனாதிபதி செயலகம் மேலும் அறிவித்துள்ளது. (க-3)

## பிந்துனுவெவப் படுகொலைகளுடன் தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு தண்டனைக்குப் பதில் பதவியுயர்வு!

### ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

புதுடில்லி,ஒக்.26

பிந்துனுவெவ புனர்வாழ்வுத் தடுப்பு முகாமில் 2000ஆம் ஆண்டு 28 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாக இலங்கை அரசால் பதவி உயர்வுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு. இந்தப் படுகொலை குறித்து விசாரணை செய்வதற்கு என இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையை மேற்கோள்காட்டி ஆசிய மனித உரிமைகள் அமைப்பு இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் பலர் பிந்துனுவெவவில் தடுப்பு முகாம் ஒன்றில் புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். 2000ஆம் ஆண்டு அந்த முகாமுக்குள் புகுந்த காடையர்கள் கும்பல் ஒன்று 28 தமிழ் இளைஞர்களை வெட்டியும்,

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் மீதான கெடுபிடிகளை உடன் நிறுத்தக் கோரிக்கை

### பொலீஸ்மா அதிபரிடம் ஜோசப் எம்.பி.விடுத்துள்ளார்

கொழும்பு,ஒக்.26

கொழும்பு, தலைநகர் மற்றும் தெற்கின் ஏனைய பகுதிகளில் தமிழ் மக்கள் தேவையற்ற பொலீஸ் சோதனைக்கும் கெடுபிடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை அண்மைக் காலமாக மீண்டும் தலைதூக்கியுள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும். இது போன்ற மனிதாபிமானமற்ற மனித உரிமை மீறல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோவை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக பொலீஸ்மா

(16ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறையில் சிப்பாய் சுட்டுக்கொலை

களுத்துறை வடக்கு மல்வத்த வீதியில் கடற்படை வீரர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. களுத்துறையிலிருந்து காலியில் உள்ள கடற்படை முகாமிற்கு கடமைக்குச் செல்லும் போதே அவர் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

தெபுவன பகுதியைச் சேர்ந்த ஆர். ரோஹண பிரியந்த (34-வயது) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவரது கொலைக்கு ரி- 56ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

களுத்துறை வடக்குப் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புலிகள் வசம் உள்ள பொலீஸாரின் பிணைக் கோரிக்கை நிராகரிப்பு

கிளிநொச்சி,ஒக்.26

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட வெளிநாட்டவர் ஒருவரைக் கைதுசெய்வதற்காகத் தேடிச் சென்ற சமயம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்தனர் என்று கூறப்படும் மூன்று பொலீஸாரினதும் பிணைக்கோரிக்கை மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை கிளிநொச்சியிலுள்ள தமிழீழ மாவட்ட நீதிமன்றில் நேற்று நடைபெற்றது. அப்போதே அவர்களின் பிணை மனு நிராகரிக்கப்பட்டது.

பொலீஸார் அனுமதியின்றி உள்நுழைந்தது தொடர்பாகத் தமிழீழ காவல்துறையின் பரிசோதகர் பொ.பவானி நீதிமன்றில் கூறியதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை வங்கியின் யாழ். கிளை, யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களுக்கென 'பொன் அரும்புகள்' மன்றத்தினை நேற்று ஆரம்பித்தது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களை முதலாவது படத்திலும், இலங்கை வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் உரையாற்றுவதையும் மாணவர் ஒருவருக்கு சேமிப்புக் கணக்குப் பத்திரம் வழங்குவதையும் அடுத்துள்ள படங்களில் காலணாம். (படங்கள்: தமிழினியன்)

# பருவமழை தாமதமாகவே ஆரம்பம் ஒக்ரோபரில் மழை பொழிவு குறைவு

## யாழ்.வானிலை ஆராய்ச்சி நிலையம் தகவல்

குட நாட்டில் இந்தமுறை பருவமழை தாமதயாகத் தொடங்கி உள்ளது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் பெறப்பட்ட மழை வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இம்முறை மழை வீழ்ச்சி மிகமிகக் குறைவு ஆகும்.

திருநெல்வேலியில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையம் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

இம்முறை ஒக்ரோபர் மாத இறுதியிலேயே மழை பொழியத் தொடங்கியுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி முதல் 24ஆம் திகதியான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு வரையான நான்கு தினங்களிலும் யாழ். மாவட்டத்தில் 151 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ஒக்ரோபர் மாத சராசரி மழை வீழ்ச்சி 242.8 மி.மீ. ஆகும். இனிவரும் நாள்களில் தொடர்ந்து மழைபெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது வளிமண்டலத்தில் பவன தாழமுக்கம் நிலவுவதால் குடாநாட்டில் மப்பும் மந்தாரமுமான காலநிலை நிலவுகின்றது. அவ்வப்போது தூறல் மழை ஏற்படும். சில வேளைகளில் வேகமான காற்று வீசலாம் - என்று திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆண்டு சராசரி மழைவீழ்சி யாழ். மாவட்டத்தில் 1260 மி.மீ. ஆக உள்ளநிலையில் இதுவரை இந்த ஆண்டில் 391 மி.மீ. மழை வீழ்ச்சியேபதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் - கடந்த ஆண்டில் ஒக்ரோபர் மாதத்தில் அதிக மழைவீழ்ச்சி பெறப்பட்டது. இம்முறை யாழ். மாவட்டத்தில் மழை தாமதமாகவே ஆரம்பித்துள்ளதால் மானாவாரிப் பயிர்ச்செய்கைகளில் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (ஐ-12)

## லைசென்ஸ் பெற விண்ணப்பித்தோருக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.26

புதியசாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தோருக்கான எழுத்துப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ். உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணி,11 மணி ஆகிய நேரங்களில் இடம்பெறவிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இப்பரீட்சை பிற்போடப்பட்டு அடுத்த மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்ட நேர ஒழுங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

## றோட்டறிக்கழக அதிதி உரை

யாழ்.றோட்டறிக் கழகம் நடத்தும் அதிதிப் பேச்சாளர் உரை நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வின் அதிதிப் பேச்சாளராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் கலந்துகொண்டு 'இயற்கைப் பேரழிவு' என்ற பொருளில் உரை நிகழ்த்துவார். (ஒ-202)

# சனி கடகராசியில் சஞ்சரிப்பதால் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கே வெற்றி

## தென்னிலங்கையின் பிரபல சோதிடர் ஆரூடம்

கொழும்பு,ஒக்.26

சனிபகவான் கடகராசியில் சஞ்சரிப்பதால் இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றிபெறும் என்று ஆரூடம் தெரிவித்திருக்கிறார் தென்னிலங்கையின் பிரபல சோதிடரான எதிரிசிங்க வியனகே. இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது 1977இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது கடகராசியில் சனிபகவான் சஞ்சரித்தார். அப்போது ஜே.ஆர்.ஜெயவர்த்தன மாபெரும் வெற்றிபெற்று ஜனாதிபதியானார். அதேபோல இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் வேளையிலும் சனிபகவான் கடகராசியில் சஞ்சரிக்கிறார். எனவேஇந்தத் தேர்தலிலும் ஐ.தே.கட்சியே வெற்றி பெறும். அத்துடன், சூறாவளி,வெள்ளம் ஆகியவற்றால் நாட்டில் அனர்த்தங்கள் ஏற்படும். நாட்டில் குழப்பங்களும் வாகன விபத்துக்களும் அதிகரிக்கும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் சோதிடர் எதிரிசிங்க வியனகே. (ஐ)

## தீயணைப்புச் சேவை மீள ஆரம்பம்

யாழ்.மாநகரசபையின் தீயணைப்புச் சேவை மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது என மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் நேற்று அறிவித்தார். யாழ்.மாநகர சபையின் தீயணைப்புச் சேவை நீண்ட காலமாகச் செயற்பட்டுவந்தது. தீயணைப்பு வாகனம் பழுதடைந்ததால் இச்சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. வாகனத்திருத்தப்பணி துரிதகதியில் முடிக்கப்பட்டது.இதனைத் தொடர்ந்தே தற்போது தீயணைப்புச் சேவை மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## இந்தியாவுடனான ஒரு நாள் தொடர்:

# 152 ஓட்டங்களால் இலங்கை அணி படுதோல்வி!

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி 152 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது. இலங்கை அணி தனது சகல விக்கெட்டுக்களையும் 198 ஓட்டங்களுக்கு இழந்து படுதோல்வியைத் தழுவியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் ராகுல் டிராவிட், முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதற்கமைய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 350 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஆரம்பத்துடுப்பாட்டத்துக்காக விரேந்தர் செவாக் - சச்சின் டெண்டுல்கர் ஜோடி களமிறங்கியது. இவர்கள் இருவரும் இணைந்து 41 ஓட்டங்களை முதலாவது விக்கெட்டுக்காகப் பெற்றுக்கொண்டனர்.

செவாக் 25 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 20 ஓட்டங்களைப் பெற்றார். இவர் சமிந்த வாஸின் பந்தில் குமார் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக இர்பான் பதான் களமிறங்கினார். இவர் - சச்சினுடன் ஜோடி சேர்ந்து தனது அதிரடியின் மூலம் அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். அத்துடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் எகிறவைத்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த சச்சினும், பதானும் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை 200ஆக உயர்த்தியது.

இவர்கள் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக 164 ஓட்டங்களைக் குவித்தனர்.

இர்பான் பதான் 70 பந்துகளுக்கு முகம் கொடுத்து 4 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 83 ஓட்டங்களை விளாசினார். இவர் டில்ஷானின் பந்தில் ஜயவர்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதற்குப் பின்னர் டெண்டுல்கர் 96 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகள் அடங்கலாக 93 ஓட்டங்களைக் குவித்தார். இவர் மஹ்ரூப்பின் பந்தில் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

4ஆவது விக்கெட்டுக்காக யுவராஜ் சிங் - டிராவிட் ஜோடி சேர்ந்தனர். இவர்கள் நான்காவது விக்கெட்டுக்காக 40 ஓட்டங்களைப் பெற்றனர். யுவராஜ்சிங் 14 ஓட்டங்களுடன் டில்ஷானின் பந்தில் 'எல்.பி.டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 5ஆவது விக்கெட்டுக்காக தோனி களமிறங்கினார். இவர் டிராவிட்டுடன் ஜோடிசேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை மேலும் வலுப்படுத்தினார்.

மறுமுனையில் ராகுல் டிராவிட் தனது நிதானம் கலந்த துடுப்பாட்டத்தின் மூலம் அரைசதத்தைப் பூர்த்திசெய்தார்.6 ஆவது விக்கெட்டுக்காக ஜோடிசேர்ந்த இவர்கள் 79 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அதிரடியாக ஆடிய தோனி 28 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்களாக 38 ஓட் டங்களைப் பெற்றுக்கொண்டார். இவர் தில் ஹாரவின் - பந்தில் ஜயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது அணி 5 விக்கெட் டுக்களுக்கு316 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

தொடர்ந்து களமிறங்கிய அஜித் அகார்கர் ஒரு ஓட்டத்துடன் 'ரன் அவுட்' ஆனார். மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ராகுல் டிராவிட் ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களை 63 பந்துகளில் ஒரு சிக்ஸர், 8 பவுண்டரிகளுடன் பெற்றுக்கொண்டார்.

50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 350 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது இந்திய அணி.

பந்துவீச்சில் சந்தன 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். வாஸ், மஹ்ரூப், முரளி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். பதிலளித்தாடிய இலங்கை அணி



வெற்றிக்கு வித்திட்ட பதான் - சச்சின்

198 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களால் படுதோல்வியைத் தழுவிக்கொண்டது.

ஆரம்பத்துடுப்பாட்டக்காரர்களாக ஜோடியாக சனத் ஜயசூரிய - மாவன் அத்தபத்து ஆகியோர் களமிறங்கினர். இவர்கள் இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக வெறும் 10 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டனர்.

மாவன் அத்தபத்து ஓர் ஓட்டத்துடன் பதான் வீசிய பந்தில் 'போல்ட்' ஆனார். தொடர்ந்து 2ஆவது விக்கெட்டுக்காக குமார் சங்கக்கார களமிறங்கினார்.

ஜயசூரிய - சங்கக்கார ஜோடி அணிக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கும் வகையில் ஓட்டங்களைப் பெற்றனர். ஆயினும், இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் அதனை நீடிக்க விடவில்லை.

அதிரடியாக ஆடிய சனத் ஜயசூரிய 28 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். இவர் ஹர்பஜன் சிங்கின் பந்தில் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 74 ஆக இருந்தது. அடுத்து குமார் சங்கக்கார ஆட்டமிழந்தார். இவர் 37 பந்துகளில் 2 சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 43 ஓட்டங்களுடன் செவாக்கின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அணி 76 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்கள் எனும் இக்கட்டான நிலையில் இருந்தது. அதிக எதிர்பார்ப்புகளுடன் 2ஆவது விக்கெட்டுக்காக களமிறங்கிய உபுல் சந்தனவும் 3 ஓட்டங்களுடன் ஹர்பஜன் சிங்கின் பந்தில் 'ஸ்டம்ப்' ஆனார்.

தொடர்ந்தும் அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டன. ரசல் ஆர்னல்ட், ஜயவர்தன, டில்ஷான், மஹ்ரூப் ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அணி 121 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து படுதோல்வியின் விளிம்பில் இருந்தது. இறுதி வரை போராடிய சமிந்த வாஸ் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். இவர் 52 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் இந்த எண்ணிக்கையை அடைந்தார். இறுதியில் இலங்கை அணி 198 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியைத் தழுவிக்கொண்டது.

பந்துவீச்சில் கார்த்திக் 49 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் சிங் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஸ்ரீசாந்த் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதான், செவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக துடுப்பாட்டத்தில் பிரகாசித்த அணித்தலைவர் ராகுல் டிராவிட் தெரிவானார். இதன்படி 7 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரில் இந்திய அணி 7-1 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கிறது. (கு-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ரணிலுடன் மட்டுமல்ல மஹிந்தவுடனும் சந்திரிகா இணக்கத்துக்கு வரவேண்டும்

'காலம் கடந்த பின்னர் ஞானோதயம்'; 'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்'; 'குதிரையோடிய பின்னர் லாயத்தை மூடும் வேலை'.

- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இப்போது பட்டறிவு மூலம் கிடைத்திருக்கும் பாடம் - அதனால் புரிந்துள்ள யதார்த்தம் - காலம் கடந்து பிறந்துள்ள அறிவாகத்தான் கொள்ளப்படவேண்டும். அதை எண்ணும்போது மேற்படி முதுமொழிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

நாட்டின் அதி பிரச்சினைக்குரிய விவகாரமான யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பான விடயத்திற்குத் தீர்வு காண்பதற்கு, நாட்டின் அனைத்துப் பெரிய கட்சிகளும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் தமது சந்திப்பின்போது ஏற்றுக்கொண்டனர் என ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சேர்ந்து பணியாற்றி இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் நல்லெண்ணம் இந்தத் தலைவர்களுக்கு உண்மையில் இருக்குமானால் - இருந்திருக்குமானால் - இந்தப் பிரச்சினைக்கு பத்தாண்டுகளுக்கு முன்னரே வெற்றிகரமாக இணக்கத் தீர்வு ஒன்றைக் கண்டிருக்கமுடியும்.

ஜனாதிபதி சந்திரிகாவையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் ஒன்றுபட்டு செயற்பட வைப்பதற்காக சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம்பொக்ஸினால் ஓர் எத்தனம் எடுக்கப்பட்டது. அது தொடர்பான ஒப்பந்தத்தில் இருவருமே கையெழுத்திட்டனர். லியம்பொக்ஸ் ஒப்பந்தம் முதல் நேற்றுமுன்தினம் காணப்பட்ட இணக்கப்பாடு வரை பல தடவைகள் இப்படி ஒன்றுபட்டு செயற்படுவதற்கான தீர்மானத்துக்கு இருவரும் பேச்சளவில் - உதட்டளவில் - வந்துள்ளனர். ஆனால், செயலில்தான் எதுவுமே உருப்படியாக நடக்கவில்லை.

இந்தத் தடவையும்கூட அதுதான் நிலைமை.

இவ்வாறு இணைந்து செயற்படுவதற்கு உள்ளார்த்தமாக - மனமார - இரு தலைவர்களுக்கும் விருப்பம் இருந்தாலும், இப்போது ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைமை அதிக அதிகார வலுவுடையதல்ல என்பதுதான் உண்மை. அடுத்த மூன்று வார காலத்தில் அதிகாரத்தை விட்டுப் போகப்போகும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இப்போது எதிர்க்கட்சித் தலைவருடன் ஒன்றுபட்டுச் செயற்படுவது குறித்து 'தத்துவம்' பேசுவதில் அர்த்தமில்லை; பயனுமில்லை.

அதுவும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை வகிக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியாக - பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகளுடன் கைகோத்து, இனப்பிரச்சினைக்கானத் தீர்வு குறித்து மோசமான கருத்துகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்க -

அதிகாரம் கையை விட்டுப் போகும் நிலையில் தமது கட்சிக்குள்ளேயே செல்வாக்கிழந்து - செல்லாக்காசாகி வரும் ஜனாதிபதி குமாரதுங்க, எதிரணித் தலைவருடன் தீர்வு முயற்சி குறித்து ஓர் உடன்பாட்டுக்கு - இணக்கப்பாட்டுக்கு - வருவதை இன்றைய நிலையில் அதிக தாக்கமுடைய விடயமாகக் கருத முடியாது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் வாய்ப்புகளை மேலும் மேலும் சிக்கலாக்கும் விதத்தில் நடந்து வருகிறார் பிரதமர் மஹிந்த. அவரது ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளும், அவர் கூட்டுச்சேர்ந்துள்ள பேரினவாதிகள் அணியின் பிரசாரமும் நிலைமையை மென்மேலும் மோசமாக்கி வருகின்றன.

இந்நிலையில் அவரது இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக - அதைத் திட்டவட்டமாகக் கண்டிக்கும் விதத்தில் - பகிரங்கமாகச் செயற்படுவதற்கும், இது விடயத்தில் தமது உள்ளார்ந்த கருத்துகளை தெட்டத் தெளிவாக மக்களுக்கு வெளிப்படுத்தும் விதத்தில் நடப்பதற்கும் ஜனாதிபதி குமாரதுங்க முன் வந்து, அத்தகைய போக்கைத் தீவிரமாக்கிக் கொண்டு, எதிரணித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு அவர் வருவாராயின் அதில் அர்த்தம் இருக்கும். அமைதித் தீர்வுக்கான வாய்ப்பை ஏற்படுத்துவதில் அது அதிக தாக்கத்தையும், செல்வாக்கையும் ஏற்படுத்தும்.

அப்படியில்லாவிட்டால்,இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சியில் பெரும்பான்மைக் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்ற விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவருடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள ஜனாதிபதி, அதற்கு முதலில் அதே விடயத்தில் தனது பிரதமருடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவாரெனில் அதனாலும் பயன் - பலன் ஏதும் கிட்ட வாய்ப்புண்டு.

அதை விடுத்து, தீர்வு முயற்சியில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் பொது இணக்கப்பாடு என்று சந்திப்புக்களின் பின்னர் வெள்ளைக் காகிதத்தில் அறிக்கை விடுவது இன்றைய நிலையில் வெறுமனே பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளுக்கு உதவுமே தவிர, நாட்டிற்கு அதனால் பெரிய பயன் ஏதும் கிடைத்துவிடமாட்டாது.

# ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே சுகாதார ஊழியர்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுவோருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே சிற்றூழியர் நியமனம் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதாக வடக்கு - கிழக்கு பிரதி மாகாண சுகாதார சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆஸ்பத்திரிகளில் நிலவும் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகப்பரீட்சை அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து 688 சுகாதாரத் தொண்டர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களுக்குரிய நியமனம் வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் - எத்தனை பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் சுகாதார அமைச்சு எமக்கு அறியத்தந்திருக்கின்றது.

இதில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு பெரும்பாலும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே இவர்களுக்குரிய நியமனங்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-13)

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு கண்ணிவெடி விழிப்புணர்வு செயலமர்வுகள்

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு கண்ணிவெடி அபாயம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களுக்கே கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்த மாகாணக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் ஆரம்ப கல்வி வகுப்புகளுக்கான பாடத்திட்டத்தில் கண்ணிவெடி தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்தவும் கண்ணிவெடி அபாயத்திலிருந்து எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் வகையிலும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு செயலமர்வுகளை நடத்தி விளக்கமளிக்க கல்வித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 24 கல்வி வலயப் பிரிவுகளிலும் உள்ள ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.(ஐ-152)

# கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையக் கட்டடம் மெருகூட்டப்படும் எனக் கூட்டுத்தாபனம் உறுதி

அரியாலை,ஒக்.26

முற்றவெளிப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையக் கட்டடத்தை மெருகூட்டும் பணிகள் யாவும் தற்போதைய கட்டடவேலைகள் நிறைவு பெற்ற பின்னரே இடம்பெறும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு தலைமை அலுவலகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இதனைத் தெரிவித்துள்ளது.

தற்போது அமைக்கப்பட்டுவரும் கட்டடம் யாழ்.நகரின் வனப்புக்கு ஏற்ற வகையில் மெருகுடன் நிறுவப்படாதது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் அண்மையில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகமேக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கடிதத்துக்கே பதில் அனுப்பப்பட்டிருக்கிறது.

புதிய கட்டுமானப் பணிகள் யாவும் நிறைவு பெற்ற பின்னர் உடனடியாக கட்டட முகப்புக்கான நிழற்குடைவசதி ஒன்றை ஏற்படுத்தி கட்டடத்துக்கு மெருகூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டுத்தாபனம் தனது பதில் கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கென கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து புதிதாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## நாளை

ஐப்பசி 10
வியாழக்கிழமை
27.10.2005
திதி: தசமி
முன்னிரவு : 1.38 வரை
நட்சத்திரம்: மகம்
சுபநேரம்: 07.33-09.03
ராகுகாலம்: 1.33-03.03
(யாவும் பழைய நேரப்படி)

# இடிகுண்டு புனரமைப்பு: இன்னும் பரிசீலனையில் இல்லை

யாழ்ப்பாணம்,ஒக்.26

கட்டுடை - நவாலி வீதியில் உள்ள இடிகுண்டு நீர்த்தேக்கத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு யாழ். ஜி.ரி. இசற். வட புனரமைப்புத் திட்டம் நிதி உதவி செய்வது குறித்து இன்னமும் பரிசீலனைக்கு எடுக்கவில்லை.

வட புனரமைப்புத் திட்ட வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. 21.10.2005 ஆம் திகதிய உதயனில் ''இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டத்தைப் புனரமைக்க ஜி.ரி.இசற் நிதியுதவி'' என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து பிரஸ்தாபிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.


நீர்த்தேக்கத்தைப் புனரமைக்க உதவுமாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் 11.10.2005 ஆம் திகதியிட்டு அனுப்பிய கோரிக்கைக் கடிதம் மிகக் கால தாமதமாகவே கிடைத்தது என்றும் -

அந்தக் கோரிக்கை இன்னும் பரிசீலனைக்குத்தானும் எடுக்கப்படவில்லை என்றும் ஜி.ரி.இசற் வடபுனரமைப்புத் திட்ட வட்டாரங்கள் மேலும் தெளிவுபடுத்தின. (அ)

## உதயவாக்கு

வாழ்க்கை என்பது ஓர் இனிய சங்கீதம். அதைக் கேட்கவேண்டும் என்ற ஆசை முதலில் நமக்கு இருக்கவேண்டும்.

-பி.சி.கணேசன்.



கலைவட்டம், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம

முதுசம் XI

கடந்தகாலமும் கழிவிரக்கமும்

மு. கனகசபையின் ஓவியங்களின் தொகுப்புக்காட்சி

27,28,29,30 ஒக்டோபர் 2005, காலை 10 மாலை 5 மணி வரை நூலகக் கேட்போர் கூடம், யாழ். பல்கலைக்கழகம்

நுழைவு ரூபா 20

D.T.S Telecom Net,* 963, K.K.S Road, Thaddathearu, Jaffna


# மரண அறிவித்தல்

## பொன்னர் முருகேசு



நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கரம்பொன் மேற்கு, ஐந்தாம்புலத்தில் வசித்துவந்தவருமான பொன்னர் முருகேசு அவர்கள் 23-10-2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னார் - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கனகசபை, இராமலிங்கம், மாணிக்கம் வள்ளியம்மை, தில்லைவனம் மற்றும் செல்லாச்சி (கனடா), கண்மணி, மீனாட்சி ஆகியோரின் சகோதரரும் குமாரசாமி, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும் சுரேஸ்குமார் (ஜேர்மனி), சசீகலா (கொழும்பு), சிவகுமார் (சுவிஸ்), சந்திரகலா (கொழும்பு), சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விநாயகப்பெருமான் (லண்டன்), சத்தியவரதன், விமலேஸ்வரி (சுவிஸ்), விஜயலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் கர்சனா, கஜன்சியா, கோபிசாந், ஆரபி, ஆதிக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-10-2005 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கரம்பொன் மேற்கு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (41975)(26-34-15-24)

# நவாலி வடக்குக்கென விவசாய சம்மேளனம்

யாழ்ப்பாணம், ஒக்.26

நவாலி வடக்கு பிரிவுக்கென தனியான விவசாய சம்மேளனம் உருவாக்கப்படும் என்று வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

நவாலி வடக்குப் பிரிவில் முழுநேர, பகுதிநேர விவசாயிகள் அதிகமாகவுள்ள பரந்த பிரதேசமாகும். மேற்படி விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்ற நவாலி வடக்குப் பிரிவிற்கு புதிய விவசாயிகள் சம்மேளனம் ஒன்றை அமைத்துத் தருமாறு நீண்டகாலமாக விவசாயிகள் கோரி வந்தனர்.

இதற்கமைய உடுவில் கமநலசேவைகள் நிலையம் பெரும்பாக அலுவலர் ஊடாக புதிய சம்மேளனம் உருவாக்கி பதிவுசெய்யப்படும் என பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - நவாலி விவசாயிகள் சம்மேளனம் நவாலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம் எனப் பெயர் மாற்றம் பெறவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஒ-185)

# வீதி விபத்தில் இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக்.26

மந்துவில் இயற்றாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - டிராக்டர் விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தையடுத்து தப்பியோடிய டிராக்டர் சாரதியை அங்கு நின்றோர் விரட்டிப் பிடித்து கொடிகாமம் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவத்தில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த எஸ்.யசோரஞ்சன் (வயது -28) என்பவரே மரணமானவராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கொடிகாமம் பொலீஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

# ஓவியக் கண்காட்சி

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலை வட்டத்தின் ஏற்பாட்டில் 'கடந்த காலமும் கழிவிரக்கமும்' என்ற தொனிப்பொருளிலான கண்காட்சி நாளை வியாழக்கிழமை தொடக்கம் 4 நாள்கள் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதில் மூத்த ஓவியர் மு.கனகசபை வரைந்த ஓவியங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன. (ஒ-204)


யாழ். இந்து மகளிர் கல்லூரி

தரம் 6 அனுமதி - 2006

மேற்படி கல்லூரியின் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 23.11.2005

(41791)(24-34-15)

பாடசாலை சேவைக்கு அலுவலக சேவைக்கு தொழிற்சாலை ஊழியர் போக்குவரத்து சேவைக்கு புதியதோர் ஆரம்பம்

HM AMBASSADOR MINI BUS



பிரதான வருமான வழி ஒன்றினை அல்லது மேலதிக வருமான வழி ஒன்றினை எதிர்பார்த்திருந்த உங்களுக்கு புத்தம் புதிய டீசல் பஸ்வண்டி.

இந்தியாவின் இந்துஸ்தான் மோட்டர்ஸ் இன் பெருமைமிக்க உற்பத்தி

யூனி மோட்டர்ஸ் (தனிப்பட்ட) லிமிட்டட

இல 105, புதிய புலர்ஸ் வீதி, கொழும்பு - 04

உடன் அழைப்பு : 2 580 581, 0714 947646 தொலைபேசி : 5 372356



Jayoda ஜயோதா

# உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6338054 முதல் 6350010 வரை சீட்டிழுப்பு இல. 179 திகதி 24-10-2005

வெற்றி எண்கள் 2 3 9 4 5 2 சுப்பர் எண் 21

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,07,31,000/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 01 | 1,07,31,000/- | 1,07,31,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | - | 10,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 105 | 5,000/- | 5,25,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,008 | 500/- | 5,04,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,047 | 50/- | 5,02,350/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 99,629 | 10/- | 9,96,290/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 1,000/- | 1,02,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,006 | 100/- | 1,00,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,970 | 20/- | 1,99,400/- |
| | - | மொத்தம் | 1,42,00,640/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 1,48,03,240/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,00,00,000/-

தொடர் இல. 7276420 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 27 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்


| | |
|---|---|
| மட்டக்களப்பு | 6340274-6-27 |
| பதுளை | 6341105-3-74 |
| அம்பாறை | 6340242-7-33 |
| பொலன்னறுவை | 6343540-9-65 |
| கொழும்பு | 6348064-0-39 |
| குருநாகல் | 6344646-7-01 |
| காலி | 6344300-5-88 |
| கொழும்பு | 6347854-1-96 |



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்று 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது கல்வி நிலையத்திற்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களை மனதார வாழ்த்துகின்றோம்.





கார்த்திகேசு - இராசேஸ்வரி தம்பதியரின் புதல்வன் செல்வன் கா.திருக்குமரன் (124)

விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவி சிறிதரன் - சாந்தநிதி தம்பதியரின் புதல்வி செல்வி சி.லதுசா (129)

தனபாலசிங்கம் - செல்வலக்குமி தம்பதியரின் புதல்வன் செல்வன் த.வைதேகன் (157)

செல்வி வி.மதுசா (134) செல்வன் சி.சாயித்தியன் (133) செல்வி மா.சேனுசா (142)

குறிப்பு:- 2006 புலமைப்பரிசில் வகுப்புகள் 01/11/2005 ஆரம்பம்.



வசந்தா கல்வி நிலையம் (V.T.C.)

உசன் - மிருசுவில்.

(41903)(24-34-15)



எற்கின்ஸ்பென்ஸ் நிறுவனத்தின்

கொழும்பு → சிங்கப்பூர் → கொழும்பு
10,000 + Tax
கொழும்பு → சிட்னி (அவுஸ்திரேலியா) → கொழும்பு
57,900 + Tax
இச்சலுகை இம்மாதம் 31ஆம் திகதி மட்டும்

முற்றிலும் குளிரூட்டப்பட்ட 24 ஆசனங்களுடன் சொகுசு பஸ் சேவையும் 10 ஆசனங்களைக் கொண்ட சொகுசு வான் சேவை

போன்ற அனைத்து சேவைகளுக்கு

குறைந்த செலவில் சொகுசு பயணம்

எற்கின்ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ் சேவிஸஸ் பிறைவேற் லிமிட்டட்

உங்கள் நம்பிக்கையான பயண முகவர்

56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0777 915824
0777 270452, 021 2223771.

(C/45924) E.mail:aitkenspenceif@sltnet.lk



உங்களுடைய வாக்குரிமையின் பெறுமதியை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா?
வாக்கினை தவறாக பிரயோகிப்பதால் உங்கள் மீதும், உங்கள் பிள்ளைகள் மீதும், நாட்டின் மீதும் அழிவையே கொண்டு வருகிறீர்கள். அறிவுபூர்வமாக சிந்தித்து வாக்களியுங்கள்
சித்தாலேப வைத்தியருக்கு வாக்களியுங்கள்

போரை முடிவிற்கு கொண்டு வருவார் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை

S.V.H.


# பிரஸல்ஸில் பிரவாகித்த 'எழுக தமிழ்'



பொதுச் சுடரேற்றுகிறார் திருமாவளவன்...



கொட்டும் மழையில் மங்கள இசை...



கஜேந்திரன் எம்.பி. தேசியக்கொடி ஏற்றுகிறார்.



அரங்க நிகழ்வில் எழுச்சி கீதம்...



பேரணியில் கோஷம்....

## தமிழீழத்துக்கு மட்டுமன்றி தமிழகத்துக்கும் தலைமை தாங்குகின்ற தலைவர் பிரபாகரன்

### 'விடுதலைச் சிறுத்தைகள்' திருமாவளவன் புகழாரம்



பிரஸல்ஸ்,ஒக்.26

தமிழீழத்துக்கு மட்டுமல்ல தமிழகத்திற்கும் தலைமை தாங்கும் தலைவர் பிரபாகரன்.

இவ்வாறு புகழாரம் சூட்டினார் தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன்.

பிரஸல்ஸ் 'எழுக தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்ட அவர் பொதுச்சுடரை ஏற்றிவைத்து உரையாற்றியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவீரன் நெப்போலியனையும் அலெக்ஸாண்டரையும் ஒன்றிணைத்த தலைவர் அண்ணன் பிரபாகரன் 'ஒருவார காலத்தில் இந்தப் பொடியன்களை நசுக்கிக் காட்டுகிறோம்' என்று ஆணவத்தோடு கொக்கரித்துக்கொண்டு சிங்கள இராணுவத்துக்கு துணையாக வந்த இந்திய இராணுவத்தைத் துரத்தியடித்தோம். தப்பித்தால் போதும் என்று தப்பி ஓடியது இந்திய இராணுவம். பின்னர் தமிழர்களை நசுக்குவதற்கு அமெரிக்காவின் உதவியை சிறிலங்கா இராணுவம் நாடியது.

அமெரிக்காவின் முக்கிய தளபதிகள் போர்க்களத்தில் சிங்கள இராணுவத்துக்குப் பயிற்சி அளித்தனர். புலிப்படை இப்படித்தான் சிந்திக்கிறது - புலித்தலைவன் இப்படியெல்லாம் உத்தரவிடுகிறார் என்றுகூறி பயிற்சி கொடுத்தது. ஆனால் அமெரிக்க இராணுவத் தளபதிகளே புறமுதுகிட்டு ஓட ஆனையிறவில் வெற்றி பெற்றோம்.

அண்ணன் பிரபாகரன் இராணுவ ரீதியாக எடுத்த ஒவ்வொரு முடிவும் உலகத்தின் கண்களை அகல விரித்து காட்ட வைத்திருக்கிறது; வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

ஒட்டுமொத்தத்திற்குமான தலைவன் பிரபாகரன் - தமிழீழத்துக்கு மட்டுமல்ல தமிழகத்திற்கும் தலைமை தாங்குகிற தலைவர் பிரபாகரன்தான். அவரது தலைமையில் கீழ் அவர் வாழுகின்ற காலத்திலேயே நாம் தமிழீழத்தை வென்றெடுப்போம்.

ஐரோப்பிய ஒன்றியமே! புலிகளின் போக்குவரத்துத் தடையை நீக்கு!

ஐரோப்பியக் கூட்டரசே! உன் செவிகளுக்கு எட்டுகிறதா? தடையை விலக்கு விலக்கு!!

தமிழர் வீரம் வெல்லும்! அதை காலம் சொல்லும்!! - என்றார் திருமாவளவன். (ஒ)

## புலிகள் மீதான பயண மறுப்பானது பக்கச்சார்பான நடவடிக்கை

### ஜேர்மனியின் அல்பேர்ட் அடிகளார் உரை

பிரஸல்ஸ்,ஒக்.26

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் பயண வரவேற்பு மறுப்பானது பக்கச்சார்பான நடவடிக்கை. பிரஸல்ஸ் 'எழுக தமிழ்' நிகழ்வில் உரையாற்றிய ஜேர்மனியரான அல்பேர்ட் கோல்ட் அடிகளார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் கனவானது தமிழீழம் என்பதை நாம் நன்றாக அறிவோம் அவர்கள் பட்ட துன்பங்களையும் அறிந்துகொண்டோம்.

2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதனால் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், சமாதான ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட எதையும் சிறிலங்கா அரசு கடைப்பிடிக்கவில்லை.

தமிழர்களுக்கு எதிரான சிறிலங்கா அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் மிகக் கடுமையாக உள்ளன. நாங்கள் இங்கிருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அழுத்தம் கொடுத்து வந்தோம். ஆனால், எதிர்மாறான சம்பவங்களே நடைபெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான பயண வரவேற்பு மறுப்பானது ஒரு பக்கச்சார்பானது. இலங்கை இனப்பிரச்சினையில் ஐரோப்பிய ஒன்றியம் நடுநிலை வகிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த நாம் கூடியுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு இனவாதத்தை வெளிப்படுத்துகின்ற முடிவு. ஐரோப்பிய ஒன்றியம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும் சுதந்திரமான தமிழீழம் மலருவதை எல்லோரும் எதிர்பார்கின்றோம் - என்றார் அவர். (ஒ)


## கொட்டும் மழையிலும் துவளாத உணர்வு

மழையின் மத்தியிலும் பிரஸல்ஸ் 'எழுக தமிழ்' நிகழ்வில் தமிழ் மக்கள் பேரெழுச்சியுடன் கூடியிருந்தனர். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை வலியுறுத்தும் மனு இதன்போது ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

பலஸ்தீன விடுதலைப் பிரகடனத்தில் பங்காற்றியவரும் சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும் இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்டங்கள் துறைப் பேராசிரியருமான பிரான்சிஸ் பாயில், தமிழீழ அமைதிப் பேச்சுக் குழுவில் இடம் பெற்றவரான சட்டத்தரணி வி.உருத்திரகுமாரன், சுவிடிஷ் பேராசிரியர் பீற்றர் ஸாக். மலேசிய பேராசிரியர் இராமசாமி, ஜேர்மனியின் ஆல்பேர்ட் கோல் அடிகளார் ஆகியோர் இந்த மனுவைக் கையளித்தனர். (ஒ)

## போர் தொடங்கினால் வளங்களை வழங்குவது புலம்பெயர்ந்த தமிழர்களின் கடப்பாடு ஆகும்!

### நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் வலியுறுத்து



பிரஸல்ஸ்,ஒக்.26

எம்மீது போர் திணிக்கப்படும் போது உரிய வளங்களை வழங்குவது புலம்பெயர்ந்த தமிழர்களின் கடப்பாடு ஆகும். பிரஸல்ஸ் 'எழுக தமிழ்' நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் இவ்வாறு வலியுறுத்தினார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த எழுச்சி நிகழ்வைப் பார்க்கும்போது போது எங்களுடைய மண் எங்களுடைய கைகளிலே வந்துசேரும் என்ற நம்பிக்கை மேலும் உறுதியாகிறது.

தேசியத் தலைவர்தான் நம்மைச் சர்வதேச அளவில் தலைநிமிர வாழவைத்திருக்கிறார் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் தன்னுடைய மக்களால்தான் தமிழர்கள் இன்று சர்வதேசத்தில் தலைநிமிர்ந்து நிற்கமுடிந்திருக்கிறது என்று தேசியத் தலைவர் கருதுகிறார்.

இந்தக் கூட்டத்தைப் பார்க்கும் ஐரோப்பிய சமூகத்தினர் தமிழர்களது நியாயப்பாடுகளைப் புரிந்துகொள்வார்கள் என்ற திடமான நம்பிக்கை எமக்கு உண்டு.

பெல்ஜியத்தில் பூரணத்துவமான கட்டமைப்பு நமக்கு இல்லை இருப்பினும் இந்தப் பேரணியை வெற்றிகரமாக ஒழுங்குபடுத்தியுள்ளீர்கள். தமிழர்களின் வலு இப்போது பிறருக்குப் புரியும். நாம் தமிழ்த் தேசியத்தின் மீதும் தமிழீழத் தேசியத் தலைவர் மீதும் கொண்டிருக்கும் பற்றும் பாசமும் வெறியும் இப்போது ஐரோப்பியர்களுக்குப் புரியும். எதிர்வரும் காலங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தனது முடிவை மறுபரிசீலனை செய்யும் சூழ்நிலை உருவாகும்.

தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் செய்யப்போவதை தீர்மானிப்பது நாம்தான். அதனால் இராணுவ மற்றும் அரசியல் ரீதியாக தலைவரின் கரங்களை வலுப்படுத்துவோம். நமது உரிமையை மீட்டெடுப்போம்.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் 70 வீதமான நிலப்பரப்பு மீட்கப்பட்டுவிட்டன. நாம் மீட்கவேண்டியது வெறுமே 30 வீதமான நிலப்பகுதிதான்.

தலைவரின் கட்டளையை நிறைவேற்ற தாயக மக்கள் தயாராக இருக்கின்றார்கள் எங்கள் மீது போர் திணிக்கப்படும்போது உரிய வளங்களை வழங்கவேண்டிய கடப்பாடு உங்களுக்கு(புலம்பெயர்ந்து தமிழருக்கு) உண்டு.

தமிழீழத்தில் தற்போதுள்ள நடைமுறை அரசின் தேசியக்கொடியை ஐக்கிய நாடுகள் சபையில் விரைவில் பறக்கச்செய்வோம் என்று செ.கஜேந்திரன் தெரிவித்தார். (ஒ)

# நேர்மைத் தன்மை பற்றிப் பேச மஹிந்தவுக்கு அருகதையில்லை

## பாய்கிறார் ஐ.தே.க. பிரதிச் செயலர்

கொழும்பு, ஒக்.26

''ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தாம் நிரபராதி என்பதை நிருபிக்க முன்வரவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாகக் கிடைத்த நிதியை முடக்கி வைத்ததுபோல் தம்மீதான பொலிஸ் விசாரணைகளையும் முடக்கிவைக்க நீதிமன்றத்தடை உத்தரவையும் அவர் பெற்றுள்ளார். எனவே, நேர்மைத் தன்மைபற்றிப் பேசுவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்தவிதமான அருகதையும் இல்லை.''

-இவ்வாறு சாடுகின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசியலில் நேர்மையும், திறமையும், தூய்மையும் உடைய ஒருவரையே ஜனாதிபதியாக மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். இவற்றை பற்றிப் பேசுவதற்கு அவருக்குச் சிறிதும் அருகதை இல்லை.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த பத்து மாதங்களாகத் தற்காலிகக் கொட்டகைகளில் முடங்கிக் கிடக்கின்றனர். அன்றாட வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டு அகதிகளாகி நிர்க்கதியாகியுள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகத் கிடைத்த 8 கோடி 30 லட்சரூபாவை தனது உறவினர்களின் பெயரில் வங்கியில் போட்டு முடக்கி வைத்திருந்தவர் பிரதமர். இதனால், அம்பாந்தோட்டை மக்களினதும் ஆழிப்பேரலை'யினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களினதும் சாபத்திற்கும் உள்ளாகியுள்ளார் அவர்.

மக்களின் வயிற்றில் அடித்த மஹிந்தவை எப்படி மக்களின் தலைவராக ஏற்பது? மோசடி செய்தது மட்டுமல்லாமல் அதைப் பற்றி விசாரிக்கவும் கூடாது என்று நீதிமன்றில் அவர் தடைஉத்தரவு வாங்கியுள்ளார். இவரை எப்படி நேர்மையானவர் என்று மக்கள் அங்கீகரிப்பார்கள்?

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான பொதுக்கட்டமைப்பை அமைச்சரவை அங்கீகரித்தது. அமைச்சரவையின் முக்கிய பொறுப்பாளியாகப் பிரதமரே இருந்தார். அது நாடாளுமன்றத்தில் அவராலேயே சமர்ப்பிக்கப்பட்டு அங்கீரிக்கப்பட்டதுடன், நாட்டு மக்களில் 78 சதவீதமானவர்களின் ஆதரவைப் பெற்றுள்ளது. இதனை ஜனாதிபதியே வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடித்தளமாக ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் இரண்டாகப் பிரிந்து கிடந்த நாடு ஒன்றானது. இதனால், பொருளாதார அபிவிருத்தியையும் சர்வதேச உதவிகளைய்ம் பெற முடிந்தது என ஜனாதிபதியும் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவும் குறிப்பிட்டு அதனை வரவேற்றுள்ளனர். இவர்கள் தேசிய பிரச்சினைகளை தீர்ப்பதில் அக்கறை உடையவர்கள். யதார்த்தம் புரிந்து செயல்படுபவர்கள்.

ஆனால், பிரதமர் மஹிந்த் ராஜபக்ஷ இவை எல்லாவற்றையும் இல்லாதொழிப்பேன் என்று கூறுகின்றார். பிரதமர் வெளியிட்டுள்ளது மஹிந்தவின் சிந்தனைகளாக அல்லாமல் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினரிடம் பொறுக்கி எடுக்கப்பட்ட சிந்தனைகளாகவே அமைந்துள்ளன.

தேசிய முக்கியத்துவம்பெற்ற இனப்பிரச்சினைக்கு பிரதான அரசியல் கட்சிகளான ஐ.தே.க.வும் ஸ்ரீ.ல.சு.கவும் இணைந்துதான் தீர்வுகாணவேண்டும். இணைந்துசெயல்படுவோம் என ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார். ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து இன்றுவரை எந்தவிதமான பதிலும் வரவில்லை.

ஐம்பதிற்கும் அதிகமான உதவிவழங்கும் நாடுகளின் தலையீட்டுடன் அரசும் - புலிகளும் ஏற்படுத்திய ஒஸ்லோ இணக்கப்பாட்டை ஜே.வி.பி. உட்பட அனைத்துக் கட்சிகளும் முன்பு ஏற்றுக்கொண்டன. ஆனால், இன்று ஜே.வி.பி.யினருடன் கூடிக் கொண்டு ஒஸ்லோ இணக்கப்பாட்டை ஏற்க முடியாது எனப் பிரதமர் கூறுகின்றார்.

ஒஸ்லோ இணக்கப்பாட்டை ஏற்றுக் கொள்ளாத பிரதமர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தாம் முன் வைத்துள்ள மாற்றுத் திட்டங்கள் அல்லது ஆலோசனைகள் எவை என்பதையும் வெளியிடவில்லை. பிரதமர் தீவிர இனவாதிகளின் எடுப்பார்க் கைப்பிள்ளையாகிவிட்டார். என்ன பேசுகின்றார் என்பது அவருக்கே தெரியவில்லை.

1994ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ அங்கம் வகித்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டி.எம். ஜயரத்னவின் சிபாரிசின்படியே நெல்சந்தைப்படுத்தும்சபை இல்லாதொழிக்கப்பட்டது. அப்போது வாயை மூடிக்கொண்டிருந்த பிரதமர் இப்போது மீண்டும் நெல்சந்தைப்படுத்தும்சபையை உருவாக்கப்போகின்றேன் என்கிறார். இது தொடர்பாக பிரதமர் ஜனாதிபதியை திட்டுகின்றாரா அல்லது அமைச்சர் ஜயவர்தனவைத் திட்டுகின்றாரா என்பதும் தெரியவில்லை. இப்படி நிலையற்ற ஒரு மனிதரை நாட்டு மக்கள் நம்பத் தயாராக இல்லை. - என்றும் ஐ.தே. க. பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, ஜயந்த விஜயசேகர ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-க)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



பாலசுப்பிரமணியம் குசலன்

யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களான பாலசுப்பிரமணியம் குசலன் 2004 ஆம் அண்டு 164 புள்ளியினையும் பாலசுப்பிரமணியம் நிருஜன் 2005 ஆம் ஆண்டு 145 புள்ளியினையும் புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். இவர்கள் கட்டுப்பிள்ளையார் சக்தி அம்மன் அருள்பெற்று சிறப்புடன் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



பாலசுப்பிரமணியம் நிருஜன்

நேற்றைய இவர்களது வாழ்த்தில் பாடசாலையின் பெயர் தவறாக அறிவிக்கப்பட்டதற்கு வருந்துகின்றோம்.

சாவகச்சேரி (41953)(42-16-11) அப்பா.

## முன்பள்ளிக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.26

கட்டைவேலி சேகரம் நேசகம் முன்பள்ளியின் நிரந்தரக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும்விழா கடந்த சனிக்கிழமை வோல்டன் பிளேஸ் தும்பளையில் இடம் பெற்றது.

அருட்குரு அன்ரனி சதீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் திட்ட இணைப்பாளர் அ. பேரின்பநாதன் கலந்து கொண்டார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழத் திட்ட இணைப்பாளர் கணேசலிங்கம், வடக்கு - கிழக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தைச் சேர்ந்த எஸ். சிவச்செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். (த-12)

## பாடசாலைக்கு சுற்றுமதில்

யாழ்ப்பாணம், ஒக்.26

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கு 200 அடி நீளமான சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது.

மெதடிஸ்த திருச்சபை அருட்குரு. அன்ரனி சதீஸ் தனது செலவில் இந்தச் சுற்றுமதிலை அமைத்துக்கொடுத்துள்ளார். (த-12)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 - 01 - 1941



உதிர்வு 07 - 11 - 2004

**அமரர் நமசிவாயம் சிவநேசன் (அப்பு அண்ணா)**

திதி:(27-10-2005)

நெஞ்சினில் வாழும் அன்புத் தெய்வமே!
நிஜத்தில் நீங்கள் எம்முடன் இன்றில்லை
நினைவில் தினமும் எம்முடன் வாழ்கின்றீர்கள்
இது என்றும் எம்மவரிடையே மாறாத உண்மை
எம்மை விட்டுப் பிரிந்து இன்று ஓராண்டு
கழிந்தாலும் உங்கள் நினைவுகள் தினம் தினம்
எம்மை வாட்டுகிறது. உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திப்போம்.
உங்கள் பிரிவில் நினைவோடு துயருறும்... குடும்பத்தினர்.

கரணவாய் வடக்கு,
நவிண்டில். (41943)(26-16-17-42) தகவல்:இரத்தினம்.

## மரண அறிவித்தல்



**சுப்பையா அருள்பாலசுந்தரலிங்கம்**

திருநெல்வேலி, காளிகோயிலடி 'அன்னை இல்லம்' அரசடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா அருள்பாலசுந்தரலிங்கம் (கோன்) அவர்கள் நேற்று (25-10-2005) இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் தங்கமாணிக்கத்தின் அன்புக் கணவரும் காயத்திரியின் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) தந்தையும் குணவதியம்மா, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (ராசா), பத்மாவதி, சோமாவதி, தியாகலிங்கம் (இந்தியா), பஞ்சலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் அழகுதுரை, தனபாலசிங்கம், விஜயலட்சுமி, பரமேஸ்வரி, வனஜா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26-10-2005) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனகிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மு.தனபாலசிங்கம்
(மைத்துனர்).

(41951)(26-16-17-42)


COMITE INTERNATIONAL GENEVE

## Vacancy Announcement

### Secretary / Welcome Assistant

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a dedicated female professional willing to assume responsibilities as a Welcome Assistant/ Secretary.

The candidate should have the following qualifications:

- Completion of 'A' Level Education, Higher (university) degree preferred
- Excellent computer-literacy
- Excellent spoken and written English and Tamil
- Working experience with an international organization and/ or in a secretarial position
- Professional qualification in secretariat

*Core responsibilities Iniclude:*

- Drafting of external correspondence in Tamil / English
- Reception and handling of internal /outgoing correspondence
- Filing of institutional documents
- Preparation of accommodation arrangements for incoming visitors
- Conduct welcome- briefing for arriving visitors / expatriates
- Assume team-leader responsibilities for a team of 8 housemaids

*Employment Conditions:*

According to ICRC's National Scale and employment conditions

We encourage suitable candidates to send their complete CVs to ICRC's office in Kilinochchi before *Thursday, 3rd of November 2005.*

Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi
Iranaimadhu junction Kilinochchi
Phone: 071 237 56 97 / 071 229 6680

# அரசுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்

## ஆசிரியர் சங்கம் அறிக்கை

ஒட்டுசுட்டான்,ஒக்.26


விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையை நீக்கவும் பேச்சை நடத்தி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காண உலக நாடுகளை ஸ்ரீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தியும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியாக் கிளை அறிக்கை ஒன்றை விடுத் துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குதலும் பேச்சு ஏற்படுத்துதலும் என்பதிற்கமைய ஐரோப்பிய யூனியனிடமும் ஏனைய சர்வதேச நாடுகளிடமும் மிகவும் காத்திரமான வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றோம்.

காலங்காலமாக எங்கள் சமூகம் அனுபவித்துவரும் துன்ப, துயரங்களுக்கு மேலும் சுமை சேர்க்கும் விடயங்களாக ஐரோப்பிய சமூகமும் ஏனைய சில மேலைத்தேய நாடுகளும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரயாணத் தடையினை ஏற்படுத்தியுள்ளன. இதனை உடனடியாக நீக்குவதுடன் விடுதலைப் புலிகளுடனான பேச்சை நடத்தி இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை ஏற்படுத்த உலக நாடுகள் ஸ்ரீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

சர்வதேச சமூகம் நேரடியாக தமிழர் தாயகத்திற்கு விஜயம் செய்து பொது அமைப்புகளுடன் சந்திப்பினை மேற்கொண்டு உண்மை நிலைமைகளை அறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். புலிகளைத் தடைசெய்வது என்பது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையே தடை செய்வதாகும் என்ற கோரிக்கையைச் சங்கம் தெரிப்பதுடன், ஐரோப்பிய யூனியனின் செயலைக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது. (9-341-202)



தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், பொருண்மிய மதியுரையகம் என்பனவற்றின் கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கும் வைபவம் கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன இயக்குநர் தெ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர் ஒருவருக்கு சைக்கிள் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)

## கடற்றொழில் திணைக்கள வேலைகள் முடக்கம்

ஒட்டுசுட்டான்,ஒக்.26

முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் திணைக்களத்தின் வேலைகள் அண்மைக் காலமாக முடங்கிப் போயுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கில் அண்மையில் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

திணைக்கள அதிகாரி கடந்த 6 மாத காலமாகக் கடமைக்குச் சமுகமளிக்கவில்லை.

இதனால், மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்கான வேலைகள் அனைத்தும் முடங்கிப் போயுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (9-341-202)

## கடன்திட்ட ஆலோசனை

ஒட்டுசுட்டான்,ஒக்.26

'டி.ஆர்.சி.' நிறுவனத்தின் நுண்நிதி சுழற்சித் திட்டக் கடன் வழங்கும் ஆலோசனைக் கூட்டம் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழக ஒன்றுகூடல் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிறுவன வதிவிடப் பிரதிநிதி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வறிய கிராமங்களைப் புனரமைப்பது, 11 கிராமங்களுக்கு சுழற்சிக் கடன் வழங்குவதற்கான ஒழுங்குபடுத்தல் போன்றவை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

சுழற்சிக் கடனாக 11 கிராமங்களுக்கும் 42 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (9-341-202)

## புதுக்குடியிருப்பில் நடைபெற்ற 'பொங்குதமிழ்' நூல்வெளியீடு

புதுக்குடியிருப்பு,ஒக்.26

ஊடகவியலாளர் கனகரவி எழுதிய 'பொங்குதமிழ்' என்னும் நூல்வெளியீட்டு விழா கடந்த 15ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழாக் கலையரங்கில் நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் ப.குகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரைப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் பெ.க.சிவலிங்கம் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

நூலை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினமும் திருமதி கனகரத்தினமும் வெளியிட்டுவைக்க, துணை அரசியல்துறைப் பொறுப்பளர் சோ.தங்கன் பெற்றுக்கொண்டார்.

நூலின் அறிமுகவுரையை முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினமும் ஆய்வுரையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலகுமாரனும் நிகழ்த்தினர். (எ-353-202)

## துணைப்படைப் பயிற்சி நிறைவு நிகழ்வு

தமிழீழ கடற்படையின் லெப்.கேணல் நாவரசன் இரண்டாவது துணைப்படை அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் நாச்சிக்குடாவில் இடம்பெற்றது. பொதுச்சுடரைத் தமிழீழ கடற்படையின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணியும் தமிழீழத் தேசியக் கொடியை மன்னார் மாவட்டத் தமிழீழ கடற்படை அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழனும் ஏற்றினர். நாவரசனின் திருவுருவப் படத்திற்கு மாவீரர் மணிமாறனின் தந்தை அகஸ்ரின்பிள்ளை மரியநாயகம் ஏற்ற கிளிநொச்சி முத்துமாரி அம்பாள் ஆலயப் பூசகர் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து அகவணக்கமும் உறுதியுரையும் இடம்பெற்றது. தலைமையுரையைத் தொடர்ந்து அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி உரையாற்றினார். சிறப்புரையை லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து பயிற்சிகளிலும் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்குத் தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை பரிசில் வழங்கிக் கௌரவித்தார். துணைப்படை வீரர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தமிழீழ கடற்படையின் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (202)

## புதுக்குடியிருப்பில் விசேட கல்வியியற் செயற்பாடு

புதுக்குடியிருப்பு,ஒக்.26

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தில் உள்ள நெடுங்கேணி கோட்டப் பாடசாலை மாணவர்களின் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றை உயர்த்தும் முகமாக 'ஒப்பர்' நிறுவனம் விசேட கல்விச் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கிவருகிறது.

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் மேற்படி திட்டம் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்பட்டது. (எ-353)

## அனுமதியின்றித் துப்பாக்கிகள் வைத்திருந்த நால்வர் கைது!

ஒட்டுசுட்டான்,ஒக்.26

அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் வவுனியா செட்டிகுளம் பகுதியில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி மேற்படி பகுதியில் தேடுதல் நடத்திய பொலீஸார் அனுமதிப் பத்திரமில்லாது துப்பாக்கிகளை வைத்திருந்த நால்வரைக் கைதுசெய்து வவுனியா நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தினர். (9-341-202)

## முதியோர் தின நிகழ்வுகள்

புதுக்குடியிருப்பு,ஒக்.26

நெடுங்கேணிப் பிரதேச முதியோர் தின நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட முதியோர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (9-353-202)

## பாடசாலையில் கட்டடம் திறப்பு

புதுக்குடியிருப்பு,ஒக்.26

உடையார்கட்டு, சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா இம்மாதம் 19ஆம் திகதி இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் த.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்களவிளக்கை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா ஆகியோர் ஏற்றினர். தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த திகழ்வண்ணன் ஏற்றினார்.

அதிபர் அலுவலகத்தை வலயக் கல்விப் பணிப்பாளரும் வகுப்பறைக் கட்டடங்களைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான செ.சிவராசா, ச.நாகரத்தினம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜீ.எஸ்.பரமேஸ்வரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.இராசரத்தினம், சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.வி.எஸ்.குலசூரியன் ஆகியோரும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தனர். (9-353-202)




## கற்சிலைமடு பாடசாலையில் புதிய கட்டடம் திறக்கப்பட்டது

ஒட்டுசுட்டான்,ஒக்.26

'நிக்கொட்' நிதியுதவியுடன் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த 19ஆம் திகதி அதிபர் பொ.அருமைத்துரை தலைமையில் நடைபெற்றது. ஒரு கட்டடத்தை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் சுபாஜினி கந்தையா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். கட்டடத்தின் ஆய்வுகூட அறையினைத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.கே.குரூஸ் நாடாவை வெட்டித்திறந்துவைத்தார்.

இரண்டாவது கட்டடத்தின் வகுப்பறையினைக் கல்விக்கழகப் பொறுப்பாளர் சுடர் நாடாவை வெட்டித்திறந்துவைத்தார். நூலக அறையினை ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி ஜெயபாலன் திறந்துவைத்தார். (த-341)



கிளிநொச்சியில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற உளநல விழாவின்போது எடுக்கப்பட்ட படங்களையே இங்கு காண்கிறீர்கள். நிகழ்வில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதியான திருமதி நிலூன் ரெய்லர், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பேராசிரியர் தயா சோமசுந்தரம், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)




**தீபாவளி மலிவு விற்பனை!**

கூபமுகூர்த்தப் பட்டு சாறிகள்.
பட்டுவேட்டி சால்வைகல்
சிறுவர்களுக்கான சூட், சேட் வகைகள்
அனைத்திற்கும் தரச்சிறப்பில்
முன்னணி பெற்ற ஒரே ஸ்தாபனம்.

**வளர்மதி புடைவை அகம்**

(176) 258, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீரில் கரைந்து 10ஆம் ஆண்டு நிறைவு நாள்



செல்வராசா தேவர்செல்வன் (தேவா)



செல்வராசா சதீஸ்குமார் (செந்தில்)

தோற்றம் 1984.05.15 → மறைவு 26.10.1995 ← தோற்றம் 1981.11.18

*சிறிலங்கா விமானப்படையின் குண்டுத் தாக்குதலில் பலியான எமது அன்புச் செல்வங்களின் 10 ஆவது ஆண்டு நிறைவில் உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து எமது இல்லத்தில் நடை பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

நிரந்தர முகவரி:
நாவலடி, அரியாலை.

தற்காலிக முகவரி:
50A, பிறவுண் றோட்,
கொக்குவில்.

செல்வராசா மகேஸ்வரி
குடும்பத்தினர்.

(41886) (39-11-45-18)

## மாவீரர் தினத்தையொட்டி கவிதைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.26

மாவீரர் தினத்தை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கவிதைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

தேச விடுதலையை மையமாகக் கொண்டு 30 -40 வரிகளுக்குள் படைப்புகள் அமைய வேண்டும் என்றும் வயது கட்டுப்பாடு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கவிதைகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கவிதைப் போட்டி - 2005, தலைமைச் செயலகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)

## தமிழ் எம்.பிக்களுடன் கண்காணிப்புக்குழு வவுனியாவில் சந்திப்பு

வவுனியா,ஒக்.26

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் எதிர்வரும் 27 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டின் போது இராணுவத்தின் இடையூறு எதுவும் இடம்பெறக் கூடாது என்பது பற்றி சந்திப்பில் கலந்து கொண்டோர் கண்காணிப்புக் குழு பிரதிநிதியிடம் வலியுறுத்தினர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் கொலைகளை தடுக்க கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி.மயில்வாகனபுரம்
அ.த.க.பாடசாலை
அதிபர்
திரு.சுப்பிரமணியம்
இராசசிங்கம் அவர்கள்
கிளிநொச்சி கல்வி
வலயத்தில் இருந்து
சிறந்த அதிபராகத்
தெரிவு செய்யப்பட்டு
06.10.2005 இல்
வடக்கு-கிழக்கு
மாகாண
சபையினால்
கௌரவிக்கப்
பட்டமையினை
பெரு மகிழ்வோடு
பாராட்டி வாழ்த்து
கின்றோம்.
(41926) (39)

**திரு.சுப்பிரமணியம் இராசசிங்கம்**

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
நலன்விரும்பிகள்.


## விசேட தீபாவளிச் சலுகை!

உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களானாலும் எந்த அளவினதானாலும் 5 வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| சுவிஸ்லாந்துக்கான | லண்டனுக்கான |
|---|---|
| 5kg பொதி ஒன்றிற்கு | 5kg பொதி ஒன்றிற்கு |
| 1kg க்கான | 1kg க்கான |
| கட்டணம் 650/= | கட்டணம் 500/= |

ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகளுக்கான பொதிகளுக்கு விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310


36, செல்வப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

முகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2827 Fax - 021 222 2993


## மக்கள் பலத்தில்... உதயன்

## 20 ஆண்டு சேவைப் பூர்த்தியை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்திலான சிறுகதைப் போட்டி

### போட்டி நிபந்தனைகள்



* சிறுகதைத் துறையில் ஆர்வமுள்ள நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவராக இருப்பினும் ஆண், பெண் இருபாலாரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.
* இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு வயதுக்கட்டுப்பாடு எதுவும் இல்லை.
* ஒருவர் எத்தனை சிறுகதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், அவை தனித்தனியான கடித உறைகளில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
* சிறுகதைகள் A4 அளவுத்தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு சிறுகதையும் A4 அளவுத்தாளில் 4 பக்கங்களுக்கு மேற்படலாகாது.
இது ஒரு திறந்தபோட்டியாகும். எழுத்தாளர்களின் கற்பனைத் திறனுக்கேற்ற வகையில் சிறுகதைகள் அமையலாம். சிறுகதைகள் சமகால சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி, தாக்கங்கள் என்பவற்றை வெளிப்படுத்துவனவாக அமைதல் விரும்பத்தக்கது.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளை மீளப்பெற்றுக்கொள்ள இயலாது. பரிசுக்குரிய சிறுகதைகள் இதற்கென நியமிக்கப்படும் நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும். சிறுகதைகள் முற்றிலும் கற்பனைக் கண்ணோட்டத்தில் அமைவனவாயிருத்தல் வேண்டும்.
* தனிப்பட்ட சம்பவங்களை அல்லது தனிப்பட்ட நபர்களை விமர்சிப்பவையாக அமைதல் ஆகாது.
தெரிவுசெய்யப்படும் முதல்மூன்று சிறுகதைகளுக்கும் கீழ்க்காணும் வகையில்
* பரிசில்கள் வழங்கப்படும்.

**முதலாவது பரிசு : தங்கப்பதக்கமும் 10,000 ரூபா பணமும்**
**இரண்டாவது பரிசு : தங்கப்பதக்கமும் 5,000 ரூபா பணமும்**
**மூன்றாவது பரிசு : 5,000 ரூபா**

* பிரசுரத்துக்குத் தகுதியானவையாகக் கருதப்படும் சிறுகதைகள் உதயனிலும் எமது சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளியிலும் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் இதற்கு முன்னர் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ எந்தவொரு பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ பிரசுரிக்கப்பட்டிருக்கக்கூடாது. ஏற்கனவே வானொலியில் ஒலிபரப்பான, இணையத்தளத்தில் வெளிவந்த சிறுகதைகளை அனுப்புதல் ஆகாது. அவை கிடைக்கப்பெறின் போட்டியிலிருந்து நீக்கப்படும்.
* போட்டிக்குரிய சிறுகதைகளை எதிர்வரும் **நவம்பர் 25ஆம்** திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக

**உதயன்**
**20 ஆவது ஆண்டு சிறுகதைப்போட்டி**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
* "உதயன்", சுடர்ஒளிப் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிபவர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.
* போட்டி தொடர்பான சகல தீர்மானங்களிலும் பிரதம ஆசிரியரின் முடிவே இறுதியானது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உருவாய் 26 - 04 - 1941



அருவாய் 06 - 11 - 2004

**திருமதி இராஜேஸ்வரி பத்மநாதன்**

திதி:26.10.2005

எத்தனை பிறவிகள் இனி நாம் எடுத்தாலும்
உத்தமியே உம்மை உறவாகத் தாவென்று
நித்தமும் வேண்டுதல் செய்கின்றோம் -அந்த எம்
அத்தன் நிழலிலேயே அடைக சாந்தியே.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(41535) (39-11-18-45)

கணவர்,
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 1941 - 07 - 02



உதிர்வு 2004 - 11 - 06

**திருமதி முத்தம்மா இராமலிங்கம்**

*திதி: 26.10.2005*

என் ஆசைச் செல்வமே
எனை விட்டு நீங்கி ஓராண்டாய் போச்சுதே
தனிமரமாய் தவிக்கவிட்டு
தவிப்பினிலே வாழ வைத்து....
நினைவுகளை மட்டுமெனக்கு
நிறைவாக விட்டுச் சென்றாய்
முடியலையே அம்மா உனைப்பிரிந்து வாழ
உன் அருமை மகளை விட்டு
ஏனம்மா ஓடிச் சென்றாய்....?
உன் உயிரின் ஆத்ம உணர்வுகள்
எங்கிருந்தாலும் அமைதிபெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்அன்னையே.

புதுவளவு, இடைக்காடு,
அச்சுவேலி.

(41796) (39-11-18-45)

உன் பிரிய மகள்.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புப் பெறவுள்ள மேலும் 5 ஆயிரத்து 800 பேரின் பெயர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டுள்ளனர். நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவானோரில் ஒரு பகுதியினரின் பெயர்கள் வருமாறு:-

273யா/ந/4786 திருமதி. ருக்மணி செல்வநாதன்
274யா/ந/4813 திருமதி. ஞானகமலாம்பிகை பொன்னம்பலம்
275யா/ந/4820 திருமதி. இராசலட்சுமி சோமசுந்தரம்
276யா/ந/4834 திரு. செல்லையா திருநாவுக்கரசு
277யா/ந/4837 திரு. வைத்திலிங்கம் துரைராஜா
278யா/ந/4843 திருமதி. இராமத்திலகம் வேலுப்பிள்ளை
279யா/ந/4845 திரு. சபாபதி திருநாவுக்கரசு
280யா/ந/4857 திரு. அப்பாத்துரை அருமைராஜா
281யா/ந/4876 திருமதி. சரோஜனாதேவி சிற்றம்பலம்
282யா/ந/4882 திரு. திருநாவுக்கரசு பத்மநாதன்
283யா/ந/4892 திருமதி. சரோஜினி ஆனந்தலிங்கம்
284யா/ந/4918 திருமதி. செல்லம்மா சின்னத்தம்பி
285யா/ந/4953 திருமதி. இராசேஸ்வரி தர்மசீலன்
286யா/ந/5047 திருமதி. மகேஸ்வரி நடராசா
287யா/ந/5050 திருமதி. நல்லம்மா கனகசபை
288யா/ந/5062 திரு. அருளம்பலம் இராஜேந்திரா
289யா/ந/5068 திரு. சின்னையா கதிரவேலு
290யா/ந/5072 செல்வி. கமலாம்பிகை அருணாசலம்
291யா/ந/5078 திருமதி. புஸ்பராணி மகாலிங்கம்
292யா/ந/5107 திரு. தம்பிமுத்து சீவரத்தினம்
293யா/ந/5115 திரு. வ.கந்தையா தர்மலிங்கம்
294யா/ந/5131 திருமதி. மலர் இராசமணி
295யா/ந/5155 திரு. பொன்னம்பலம் ஆறுமுகம்
296யா/ந/5168 திருமதி. தனலக்சுமி துரைசிங்கம்
297யா/ந/5174 திருமதி. பொன்மாணிக்கம் இராமமூர்த்தி
298யா/ந/5179 செல்வி. இலட்சுமி சின்னப்பிள்ளை
299யா/ந/5196 திருமதி. ஞானபுஷ்பம் செல்வநாயகம்
300யா/ந/5217 திரு. நாகமுத்து பூபாலசிங்கம்
301யா/ந/5242 திருமதி. சுந்தரம் சுப்பிரமணியம்
302யா/ந/5267 திரு. கந்தன் வல்லிபுரம்
303யா/ந/5278 திருமதி. மகேஸ்வரி செல்வரட்ணம்
304யா/ந/5292 திரு. சின்னப்பு நவரத்தினம்
305யா/ந/5310 திரு. பொன்னுத்துரை இரத்தினசிங்கம்
306யா/ந/5323 திருமதி. செயறெட்ணம் தம்பிராசா
307யா/ந/5368 திரு. வேலப்பன் சண்முகசுந்தரம்
308யா/ந/5372 செல்வி. கமலாவதி செல்லத்துரை
309யா/ந/5382 திருமதி. பிலோமினா சுகிர்தமலர் தம்பிப்பிள்ளை
310யா/ந/5409 திருமதி. இந்திராணி சிவசுப்பிரமணியம்
311யா/ந/5417 திரு. தில்லைநாதன் கனகநாதன்
312யா/ந/5427 திரு. நாகநாதன் திருச்செல்வம்
313யா/ந/5433 திருமதி. சோதிமணியம்மா செல்லத்துரை
314யா/ந/5466 திரு. கணபதிப்பிள்ளை சபாநாயகம்
315யா/ந/5473 திருமதி. தங்கம்மா தியாகராசா
316யா/ந/5475 திரு. சுப்பையா தேசிகநாதன்
317யா/ந/5477 திருமதி. பங்கஜவல்லியம்மா செல்லத்துரை
318யா/ந/5494 திரு. கந்தையா நல்லநாதன்
319யா/ந/5503 திருமதி. நாகேஸ்வரி பிரம்மானந்தா
320யா/ந/5504 திருமதி. கனகேஸ்வரி நடராஜா
321யா/ந/5506 திருமதி. கனகேஸ்வரி நடராஜா
322யா/ந/5512 திரு. கனகசபை கதிரவேலுப்பிள்ளை
323யா/ந/5524 திருமதி. பராசக்தி இராஜேந்திரம்
324யா/ந/5543 திரு. சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன்
325யா/ந/5564 திரு. சின்னையா பரமலிங்கம்
326யா/ந/5568 திரு. கந்தையா சிவராசா
327யா/ந/5572 திருமதி. அன்னலட்சுமி துரைசிங்கம்
328யா/ந/5594 திருமதி. தங்கரத்தினம் இராமச்சந்திரன்
329யா/ந/5999 திருமதி. புவனேஸ்வரி திருஞானசம்பந்தர்
330யா/ந/5611 திருமதி. திலகவதி சதாசிவம்
331யா/ந/5615 திருமதி. பத்மாவதி பாலசிங்கம்
332யா/ந/5629 திருமதி. இரத்தினேஸ்வரி கனேஸ்
333யா/ந/5632 திருமதி. கமலாதேவி இரத்தினலிங்கம்
334யா/ந/5635 திரு. நடராசா ஜெகநாதன்
335யா/ந/5637 திரு. நாகலிங்கம் சோமசுந்தரம்
336யா/ந/5679 திருமதி. புவனேஸ்வரி இராசரத்தினம்
337யா/ந/5690 திரு. சுப்பிரமணியம் பசுபதி
338யா/ந/5721 திருமதி. கௌரியம்மா கனகரெத்தினம்
339யா/ந/5736 திரு. சின்னையா செல்லையா இராசரத்தினம்
340யா/ந/5747 திரு. இராசையா துரைராசா
341யா/ந/5761 திரு. பொன்னு செல்வரட்ணம்
342யா/ந/5774 திரு. ஆறுமுகம் செல்லையா
343யா/ந/5786 திருமதி. நாகரத்தினம் சுப்பிரமணியம்
344யா/ந/5796 திருமதி. சரஸ்வதி தனபாலசிங்கம்
345யா/ந/5830 திரு. கந்தர் இராசரத்தினம்
346யா/ந/5854 திரு. சண்முகம் சுந்தரம்
347யா/ந/5878 திருமதி. பரமேஸ்வரி துரைராசா
348யா/ந/5896 திருமதி. மனோன்மணி சரவணமுத்து
349யா/ந/5908 திருமதி. பரமேஸ்வரி பரமலிங்கம்
350யா/ந/5932 திருமதி. பத்மாவதி செல்வராசா
351யா/ந/5939 திரு. சுப்பையா கனகரத்தினம்
352யா/ந/5942 திருமதி. பாக்கியம் ஞானப்பிரகாசம்
353யா/ந/5953 திருமதி. பாக்யலட்சுமி மயில்வாகனம்
354யா/ந/5963 திருமதி. அரியமலர் ஆறுமுகம்
355யா/ந/5988 திரு. மதியாபரணம் மகேசன்
356யா/ந/6008 திருமதி. செல்லம்மா இராசரத்தினம்
357யா/ந/6049 திருமதி. மகேஸ்வரி தம்பிஜயா
358யா/ந/6056 திரு. கணபதி கனகன்
359யா/ந/6061 திருமதி. பரமேஸ்வரி சின்னத்துரை
360யா/ந/6062 திருமதி. பரமேஸ்வரி சண்முகராசா
361யா/ந/6105 திரு. தம்பையா பரராசசிங்கம்
362யா/ந/6107 திருமதி. அரசம்மா செல்லையா
363யா/ந/6108 திரு. அப்பாப்பிள்ளை நல்லையா
364யா/ந/6132 திரு. செல்லர் அரசலிங்கம்
365யா/ந/6152 திரு. ஐயன் நடேசு
366யா/ந/6154 திரு. செல்லையா இரத்தினசிங்கம்
367யா/ந/6171 திரு. கணபதி நடேசன்
368யா/ந/6179 திரு. சுப்பையா, திருநாவுக்கரசு
369யா/ந/6183 திரு. இராஜேந்திரம் கிருஷ்ணசுவாமி
370யா/ந/6187 திருமதி. பாக்கியலட்சுமி ஜெயரட்ணம்
371யா/ந/6205 திருமதி. இராசலெட்சுமி தருமலிங்கம்
372யா/ந/6236 திருமதி. நாகம்மா தம்பிராசா
373யா/ந/6242 திருமதி. நேசம்மா அப்புத்துரை
374யா/ந/6260 திரு. கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்
375யா/ந/6271 திரு. நாகன் இராசையா
376யா/ந/6295 திரு. கந்தையா நடராசா
377யா/ந/6305 திரு. வி. கந்தையா இராசதுரை
378யா/ந/6318 திரு. செல்லையா இராசரத்தினம்
379யா/ந/6336 திருமதி. செல்லம்மா கந்தையா
380யா/ந/6365 திருமதி. பார்வதி சண்முகநாதன்
381யா/ந/6384 திரு. தாவீது பிரான்சிஸ்
382யா/ந/6385 திருமதி. சரஸ்வதி ஜெயராசசிங்கம்
383யா/ந/6394 திருமதி. பராசக்தி இராசையா
384யா/ந/6428 திரு. கணபதிப்பிள்ளை செல்வநாயகம்
385யா/ந/6431 திருமதி. றெஜினா கனகம்மா பரஞ்சோதி
386யா/ந/6437 திரு. சின்னத்தம்பி மகேந்திரநாதன்
387யா/ந/6438 திரு. சிவஞானம் சிவராசா
388யா/ந/6483 திருமதி. கமலாம்பிகை பொன்னுத்துரை
389யா/ந/6487 திரு. முருகேசு மயில்வாகனம்
390யா/ந/6508 திருமதி. புஸ்பராணி இளையதம்பி
391யா/ந/6534 திருமதி. சிவபாக்கியம் கந்தசாமி
392யா/ந/6551 திரு. செல்லையா சண்முகலிங்கம்
393யா/ந/6571 திருமதி. பாக்கியம் கனகலிங்கம்
394யா/ந/6583 திரு. வீரசிங்கம் சகாதேவசங்கரி
395யா/ந/6606 திரு. நல்லதம்பி கிருஷ்ணபிள்ளை
396யா/ந/6608 திரு. சபாரத்தினம் சண்முகராசா
397யா/ந/6611 திரு. சதாசிவம் மூத்ததம்பி
398யா/ந/6639 திரு. நடராஜக்குருக்கள் இராமகிருஷ்ணசர்மா
399யா/ந/6640 திருமதி. சுகிர்தம்மா சிவானந்தன்
400யா/ந/6641 திருமதி. நாகம்மா முருகேஸ்
401யா/ந/6658 திரு.தம்பிராசா சண்முகநாதன்
402யா/ந/6694 திரு. வல்லிபுரம் சிவலிங்கம்
403யா/ந/6696 திரு. ஐயம்பிள்ளை அமரசிகாமணி
404யா/ந/6715 திருமதி. கனகம்மா தளையசிங்கம்
405யா/ந/6723 திரு. சேனாதிராஜா சிவராஜா
406யா/ந/6724 திரு. முருகேசு துரைராஜசிங்கம்
407யா/ந/6730 திரு. இராஜசிங்கம் சிவதாஸ்
408யா/ந/6732 திருமதி. சிவஞானசுந்தரி பொன்னையா
409யா/ந/6779 திருமதி. பத்மாவதி குமாரசாமி
410யா/ந/6811 திருமதி. கனகம்மா நல்லையா
411யா/ந/6827 திருமதி. சுகிர்தம் மகேசன்
412யா/ந/6854 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை
413யா/ந/6865 திரு. ஆறுமுகம் சவுந்தரராஜா
414யா/ந/6872 திருமதி. புஸ்பராணி முருகேசு
415யா/ந/6893 திருமதி. கமலாம்பிகை யோகேந்திரன்
416யா/ந/6905 திரு. சுப்பிரமணியம் பாலகிருஸ்ணன்
417யா/ந/6910 திரு. ஐயம்பிள்ளை யாதவராசன்
418யா/ந/6925 திரு. நாகன் கனகசபை
419யா/ந/6934 திரு. குழந்தை குப்புசாமி
420யா/ந/6987 திருமதி. செல்லம்மா நடேசு
421யா/ந/7003 திருமதி. தவமணிதேவி பூபாலசிங்கம்
422யா/ந/7049 திரு. அருளம்பலம் குகதாசன்
423யா/ந/7058 திருமதி. கண்மணி பொன்னு
424யா/ந/7060 திரு. சுந்தரம் சங்கரலிங்கம்
425யா/ந/7070 திரு. இராசரத்தினம் இராசநாதன்
426யா/ந/7073 திருமதி. நேசமணி குமாரசாமி
427யா/ந/7080 திருமதி. பாக்கியம் முத்து
428யா/ந/7095 திருமதி. நாகரத்தினம் குலசேகரம்
429யா/ந/7098 திருமதி. தங்கரத்தினம் கோபாலசிங்கம்
430யா/ந/7102 திருமதி. பத்மாவதி வேலுப்பிள்ளை
431யா/ந/7124 திரு. தம்பிஐயா குணநாயகம்
432யா/ந/7127 திருமதி. விஜயலஷ்மி சரவணமுத்து
433யா/ந/7146 திருமதி. கனகம்மா சின்னப்பா
434யா/ந/7164 திருமதி. இந்திரா சவுந்தரநாயகம்
435யா/ந/7172 திருமதி. அன்னபூரணம் கனகராசா
436யா/ந/7174 திருமதி. யோகம்மா காளிதாஸ்
437யா/ந/7208 திருமதி. மனோன்மணி பரராசசிங்கம்
438யா/ந/7234 திருமதி. மணி கனகலிங்கம்
439யா/ந/7255 திருமதி. நல்லம்மா சிவபாக்கியன்
440யா/ந/7263 திரு. ஏரம்பு குருமூர்த்தி
441யா/ந/7267 திரு. சபாபதி வேலாயுதபிள்ளை
442யா/ந/7276 திரு. சின்னத்தம்பி கதிரேசன்
443யா/ந/7280 திரு. சுப்பிரமணியம் பத்மநாதன்
444யா/ந/7283 திரு. வீரவாகு முருகையா
445யா/ந/7296 திருமதி. பரமேஸ்வரி இராசதுரை
446யா/ந/7303 திரு. செல்லத்துரை சத்தியநாதன்
447யா/ந/7310 திருமதி. யோகேஸ்வரி பரமேஸ்வரன்
448யா/ந/7321 திரு. முத்துக்குமாரு விஸ்வேஸ்வரன்
449யா/ந/7333 திருமதி. பாலாம்பிகை வேம்புக்குமார்
450யா/ந/7373 திரு. கந்தையா நவரட்ணம்
451யா/ந/7414 திருமதி. மகாலட்சுமி தேவராசா
452யா/ந/7415 திருமதி. லட்சுமி முத்து
453யா/ந/7433 திருமதி. வீரலட்சுமி கந்தசாமி
454யா/ந/7460 திருமதி. தங்கச்சியம்மா பொன்னையா
455யா/ந/7462 திரு. பொன்னுத்துரை ராஜேந்திரவதி
456யா/ந/7468 திருமதி. கனகம்மா ஆறுமுகம்
457யா/ந/7469 திரு. கந்தையா தர்மலிங்கம்
458யா/ந/7487 திருமதி. சரஸ்வதி சுப்பையா
459யா/ந/7501 திருமதி. கனகம்மா சுந்தரம்பிள்ளை
460யா/ந/7536 திருமதி. புஷ்பம் முத்துத்தம்பி
461யா/ந/7554 திருமதி. தங்கரெட்ணம் செல்வராசா
462யா/ந/7563 திரு. கந்தையா அன்னலிங்கம்
463யா/ந/7570 திருமதி. யோகேஸ்வரி இளையதம்பி
464யா/ந/7574 திரு. சுப்பிரமணியம் அருமைநாயகம்
465யா/ந/7576 திருமதி. கோமேஸ்வரி மயில்வாகனம்
466யா/ந/7616 திரு. செல்லர் துரைசிங்கம்
467யா/ந/7630 திருமதி. பொன்னம்மா செல்லத்துரை
468யா/ந/7651 திருமதி. தனபாக்கியம் தர்மலிங்கம்
469யா/ந/7654 திரு. முத்துத்தம்பி மகாதேவா
470யா/ந/7661 திருமதி. மகேஸ்வரி கனகசபை
471யா/ந/7684 திரு. இராசரட்ணம் செல்வராஜா
472யா/ந/7687 திரு. கறுவல் கிருஷ்ணன்
473யா/ந/7717 திருமதி. கமலாதேவி விஸ்வநாதசர்மா
474யா/ந/7719 திருமதி. அன்னலட்சுமி சுப்பையா
475யா/ந/7720 திரு. கந்தையா வவநாதன்
476யா/ந/7739 திருமதி. கனகேஸ்வரி இராசா
477யா/ந/7750 திரு. செல்லையா இராசதுரை
478யா/ந/7753 திருமதி. பொன்மலர் சிவகிரீடம்
479யா/ந/7754 திருமதி. கோகுலாம்பாள் பூபாலசிங்கம்
480யா/ந/7774 திரு. வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை
481யா/ந/7790 திரு. வைத்திலிங்கம் தில்லைச்சந்திரன்
482யா/ந/7792 திருமதி. தங்கலட்சுமி முருகேசு
483யா/ந/7793 திரு. இராமநாதன் இரத்தினவினாயகர்
484யா/ந/7818 திரு. கார்த்திகேசு குணரட்ணம்
485யா/ந/7829 திருமதி. இராசலட்சுமி இராசதுரை
486யா/ந/7834 திருமதி. கமலாதேவி மகாதேவன்
487யா/ந/7882 திருமதி. உருக்குமணி கார்த்தியேசு
488யா/ந/7884 திருமதி. ஞானேஸ்வரி கோபாலசிங்கம்
489யா/ந/7938 திருமதி. கமலாம்பிகை பூராஜ
490யா/ந/7954 திருமதி. பத்மாவதி இராசரத்தினம்
491யா/ந/7964 திருமதி. இலட்சுமிப்பிள்ளை இராசேந்திரம்
492யா/ந/7975 திரு. பொன்னம்பலம் இராமச்சந்திரன்
493யா/ந/7984 திருமதி. பிலோமினா தம்பிஐயா
494யா/ந/7995 திரு. கந்தையா கனகசபை
495யா/ந/7998 செல்வி. கமலாம்பிகை துரைச்சாமி
496யா/ந/8008 திருமதி. கமலாம்பிகை ஐயாத்துரை
497யா/ந/8095 திருமதி. சரஸ்வதி கருப்பையா
498யா/ந/8179 திருமதி. பாக்கியம் மார்க்கண்டு
499யா/ந/8183 திரு. சிவசம்பு கிருஷ்ணசாமி
500யா/ந/8209 திரு. மாரிமுத்து கனகசபை
501யா/ந/8218 திரு. சிவசுப்பிரமணியம் குமாரரத்தினம்
502யா/ந/8223 திரு. கதிரவேற்பிள்ளை இரத்தினசிங்கம்
503யா/ந/8226 திருமதி. இராசம்மா முருகேசு
504யா/ந/8263 திரு. சுப்பையா தெட்சணாமூர்த்தி
505யா/ந/8270 திருமதி. திருமகள் திருநாவுக்கரசு
506யா/ந/8295 திரு. காசிப்பிள்ளை தளையசிங்கம்
507யா/ந/8297 திருமதி. மகேஸ்வரி இராசரட்ணம்
508யா/ந/8305 திரு. சிவக்கொழுந்து மகாதேவன்
509யா/ந/8308 திரு. சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம்
510யா/ந/8310 திரு. பொன்னையா மயில்வாகனம்
511யா/ந/8321 திருமதி. தர்மேஸ்வரி நடராஜா
512யா/ந/8327 திரு. மாணிக்கம் சிவபாதசுந்தரம்
513யா/ந/8378 திருமதி. பரமேஸ்வரி செல்வராஜா
514யா/ந/8383 திரு. செல்லையா விநாயகமூர்த்தி
515யா/ந/8399 திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்
516யா/ந/8430 திரு. மாரிமுத்து சிவராசா
517யா/ந/8439 திரு. பரஞ்சோதி சரவணமுத்து
518யா/ந/8484 திரு. குட்டி சிவகுரு
519யா/ந/8491 திரு. கந்தையா இராஜேந்திரா
520யா/ந/8496 திரு. கணபதிப்பிள்ளை ஆனந்தநடராசா
521யா/ந/8518 திருமதி. ஜானகியம்மா இராசரத்தினம்
522யா/ந/8535 திருமதி. சிந்தாமணி கந்தையா
523யா/ந/8617 திருமதி. சிவயோகம் ஆறுமுகம்பிள்ளை
524யா/ந/8681 திருமதி. கனகம்மா குணநாயகம்
525யா/ந/8704 திருமதி. புஷ்பராணி மகாதேவன்
526யா/ந/8716 திரு. கதிரவேலு நடேசு
527யா/ந/8738 திரு. கதிர்காமர் வல்லிபுரம்
528யா/ந/8752 திருமதி. அன்னம்மா பரஞ்சோதி
529யா/ந/8760 திரு. முருகேசு செல்லையா
530யா/ந/8778 திருமதி. நாகேஸ்வரி நடராசா
531யா/ந/8823 திருமதி. ஞானரஞ்சிதம் ஞானசம்பந்தன்
532யா/ந/8860 திருமதி. மனோன்மணி குலசிங்கம்
533யா/ந/8905 திருமதி. ஜெயமணி சின்னத்துரை
534யா/ந/8906 திருமதி. நாகேஸ்வரி குலசேகரசிங்கம்
535யா/ந/8909 திருமதி. கண்ணம்பிகை தேவராசா
536யா/ந/8917 திரு. சதாசிவம் இராசேந்திரம்
537யா/ந/8957 திருமதி. சிவபாக்கியம் கந்தையா
538யா/ந/8959 திரு. இராசநாயகம் சண்முகபாலன்
539யா/ந/8968 திருமதி. மீனாட்சி நாதன்
540யா/ந/9006 திருமதி. பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்
541யா/ந/9034 திரு. பாலச்சந்திரன் சடாச்சரம்
542யா/ந/9065 திருமதி. இராஜேஸ்வரி கனகசிங்கம்
543யா/ந/9070 திருமதி. யோசப்பினால் சின்னத்துரை
544யா/ந/9088 திரு. சபாபதி புஸ்பராசலிங்கம்
545யா/ந/9131 திருமதி. முத்தம்மா அருளம்பலம்
546யா/ந/9146 திருமதி. நகுலேஸ்வரி மகேஸ்வரன்
547யா/ந/9157 திருமதி. பூபதி செல்வரத்தினம்
548யா/ந/9207 திரு. மயில்வாகனம் பத்மநாதன்
549யா/ந/9222 திருமதி. கனகமணி இராசதுரை
550யா/ந/9252 திருமதி. பூமணி கணபதிப்பிள்ளை
551யா/ந/9288 திருமதி. இராஜேஸ்வரி சிவப்பிரகாசம்
552யா/ந/9317 திரு. செல்லர் சிவலிங்கம்
553யா/ந/9327 திரு. இரத்தினசபாபதி இராஜரத்தினம்
554யா/ந/9409 திரு. கந்தையா வல்லிபுரம்
555யா/ந/9430 திருமதி. மங்கயற்கரசி மார்க்கண்டு
556யா/ந/9442 திரு. சந்திரகுட்டி சுகுமாரன்
557யா/ந/9443 திரு. கந்தர் சின்னத்துரை
558யா/ந/9469 திரு. நாகரட்ணம் பொன்னம்பலம்
559யா/ந/9475 திருமதி. பரமேஸ்வரி கந்தையா
560யா/ந/9542 திரு. வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை
561யா/ந/9546 திருமதி. செல்லம்மா சோமசுந்தரம்
562யா/ந/9571 திரு. வேலுப்பிள்ளை வாமதேவன்
563யா/ந/9593 திரு. சுப்பிரமணியம் யோகநாதன்
564யா/ந/9595 திரு. ஆறுமுகம் சுந்தரலிங்கம்
565யா/ந/9650 திருமதி. பரிமளநாயகி கனகரத்தினம்
566யா/ந/9651 திரு. இராசையா பீதாம்பரம்
567யா/ந/9685 திருமதி. நாகி பொன்னன்
568யா/ந/9689 திரு. செல்லையா சுப்பிரமணியம்
569யா/ந/9702 திருமதி. ஜெகதீஸ்வரி கனகசபாபதி
570யா/ந/9709 திரு. கணபதிப்பிள்ளை வெற்றிவேல்
571யா/ந/9728 திருமதி. பாக்கியலட்சுமி துரைராசா
572யா/ந/9779 திரு. தம்பு இராசலிங்கம்
573யா/ந/9784 திருமதி. லலிதா பரராசசிங்கம்
574யா/ந/9797 திரு. கனகலிங்கம் இராசரட்ணம்
575யா/ந/9828 திரு. செல்லையா நடராசா
576யா/ந/9829 திரு. சபாபதிப்பிள்ளை குமாரசாமி

(வளரும்)

# இலவச அமெரிக்க லொத்தர் விசாவைப் பெற்றுக்கொள்ள விரைவாகச் செயற்படுங்கள்



கொழும்பில் உள்ள எமது தலைமை அலுவலகம் மூலமாக இதுவரை பெற்றுக் கொடுத்த சேவையை முதல் முறையாக யாழ். மண்ணில் இலவசமாக அறிமுகப் படுத்துகின்றோம்.

❊ இந்த விசாவினைப் பெறுவதற்கு கல்வித்தகைமை, வயது எல்லை எதுவும் தேவையில்லை. நீங்கள் குடும்பத்தோடும், தனியாகவும் குடியேறலாம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.

**RAINBOW TRAVELS & TOURS**
32 1/2, KASTURYAR ROAD, JAFFNA.
Tel: 021 2223237


## மட்டு.வர்த்தக நிலையம் மீது கிரனேட் வீச்சு; இருவர் காயம்!

மட்டக்களப்பு நகரின் எல்லை வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் மீது ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலின்போது கடை வர்த்தகரும், மற்றுமொரு இளைஞரும் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் இரவு 7.30 மணியளவில் இடம் பெற்றது என மட்டக்களப்பு தலைமைப் பொலீஸார் தெரிவித்தனர். சின்னத்தம்பி இராசலிங்கம் (வயது -55), நிரஞ்சன் தினேஷ்குமார் (வயது- 16) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இனம்தெரியாத நபர்களினால் இந்தக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை மட்டக்களப்புப் பொலீஸார் மேற்தொண்டுவருகின்றனர். (ஐ-க)

## ஓட்டோக்களை கொள்ளையிட்ட கோஷ்டி பொலீஸாரால் கைது!

நீண்டகாலமாக ஓட்டோக்களைக் கொள்ளையடிக்கும் கோஷ்டியொன்றை செட்டிக்குளம் பொலீஸார் கைதுசெய்திருக்கின்றனர்.

ஓட்டோவொன்றைத் திருடிச்சென்று கொண்டிருக்கும்போதே செட்டிக்குளம் பொலீஸார் இவர்களைக் கைது செய்திருக்கின்றனர். வவுனியா, புத்தளம், பொலன்னறுவை, அநு ராதபுரம் ஆகிய பகுதிகளில் ஓட்டோக்களைத் திருடியிருக்கும் இந்தக் கொள்ளைக் கோஷ்டி அவற்றை வன்னிப் பகுதிக்குக் கொண்டுசென்று விற்பனை செய்திருப்பதும் தெரியவந்துள்ளது.

இரண்டு சிங்களவர்கள், இரண்டு தமிழர்களைக் கொண்ட இந்தக் கொள்ளையர் குழு குறித்து செட்டிக்குளம் பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-க)

## பழமரக்கன்றுகள் விநியோகம்

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நல்லின பழமரக்கன்றுகள் புத்தூர், உரும்பிராய் கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்படுகின்றன.

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நல்லின தோடை, மா,பலா,தேசி, கமுகு நாற்றுகள் என்பனவே இலவசமாக வழங்கப் படுகின்றன.

புத்தூர் கமநல சேவை நிலையப் பிராந்தியத்தில் 36 பயனாளிகளுக்கும் உரும்பிராய் கமநலசேவை பிராந்தியத்தில் 39 பயனாளிகளுக்கும் இதுவரை பழமரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என்று பொறுப்பதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகர், யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க. வித்தியாலய அதிபர்

**திருமதி த.நாகரத்தினம்**

அவர்கள் தீவகக் கல்வி வலயத்திலிருந்து 'சிறந்த அதிபராகத்' தெரிவு செய்யப்பட்டு 06.10.2005 இல் திருகோணமலையில் கல்வி அமைச்சும் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்திய உலக ஆசிரியர் தினம் 2005 கௌரவிப்பு விழாவில் ஜனாதிபதி விருதினையும் சான்றிதழையும் பெற்றதனைப் பெருமகிழ்வோடு பாராட்டுவதுடன் மேன்மேலும் சேவையில் உயர்ந்து நலன்கள் பலவும் பெற வேண்டுமென உளப் பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

காரைநகர் வாழ்- பழையமாணவர்களும்,
பெற்றோரும்.

(41941)(26-21-15-34)

## நிகொட்-முல்லைத்தீவு அமைய அடிப்படையிலான தொழில்நுட்ப (Technical Officer) உத்தியோகத்தர்களுக்கான

# பதவி வெற்றிடம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிகொட் திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக கீழ்க்கண்ட தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. தகைமைகள்

அ.கல்வித்தராதரம்

1) க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி

ஆ) தொழில்நுட்பத் தராதரம்

1. தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் - NCT அல்லது தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா சான்றிதழ் NDT (கட்டட நிர்மாணம்) அல்லது கட்டட நிர்மாணத் தொழில்நுட்பச் சான்றிதழ் (BCT)
2. தொழில்நுட்பச் சேவையில் உள்ள அனுபவம் சம்பந்தமான தராதரப் பத்திரங்கள்

02. சேவை நிபந்தனை

1. இந்நியமனம் முற்றுமுழுதாக அமைய அடிப்படையிலானதாகும்.
2. செயற்படுத்தப்படும் திட்டங்களின் கால எல்லைக்கு அமைவாக அமைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சேவைக் காலம் நீடிக்கப்படும்.
3. வேதனமும் ஏனைய படிகளும் அரச பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு ஏற்புடையதாக அமையும்.
4. வேதனங்களும் ஏனைய படிகளும் வழங்கப்படும் காலம் செயற் படுத்தப்படும் உபகருத்திட்டங்களின் கால எல்லைக்கு அமைவாகவே அமையும் ஆயினும் பல்வேறு உப கருத்திட்டங் கள் நடை முறைப்படுத்த இருப்பதனால் தொடர்ச்சியாக பல உபகருத்திட்டங்களில் வேலை வாய்ப்பினை பெறுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

03. மேற்படி முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்களுடன் (Bio data) கூடிய விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் **அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு.** என்ற முகவரிக்கு 11.11.2005ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'நிகொட் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவி' எனக் குறிப்பிடல் வேண்டும்.

திருமதி இமெல்டா சுகுமார்
**அரச அதிபர், மாவட்டச் செயலாளர்,**
**முல்லைத்தீவு .**

(சி-45916) (21-15-34)


# MBBS / MD
## BECOME A DOCTOR

Medical Degree (Doctor of Medicine MD) offered by



**CRIMEA MEDICAL INSTITUTE**
**(CRIMEA STATE MEDICAL UNIVERSITY)**

East **EUROPE** (Ukraine)

**Recognized by the SRI LANKAN MEDICAL COUNCIL**

**M.B.B.S Degree Program (6 years)**
Eligibility : G.C.E A/L passes in Biology Physics and Chemistry

**Premedical Program + MBBS (7 years)**
Eligibility : G.C.E O/L passes in All subjects including English, Maths and Science

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால், UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அன்டைநாடுகளாகிய Poland Romania, Austria, Italy, France, Spain, Germany, U.K, ஆகியநாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

# யாழ்ப்பாணத்தில்.......

30ஆம் திகதி (ஞாயிற்று கிழமை) எமது காரியாலய பிரதிநிதிகளை சந்தித்து சகல விபரங்களைப்பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்

இடம் : COSY Restaurant, 15 Sirampiadi Lane, (Stanley Road) Jaffna.
நேரம் : 30ம் திகதி ஞாயிற்றுகிழமை-மாலை 3.30 pm - 6.30 pm

**Authorized Agents for Asian Region:**
M/s. MAJU INDRA SDN BHD, Kuala Lumpur Malaysia.

**Admissions Co-ordinated in Sri Lanka by**
Scholars Information Center,
2nd Floor, 'Colombo Plaza', 50, Galle Road, Wellawatta, Colombo - 06.
e-mail : peter@scholars-info.com **Tel: 0777-767818**

ஐரோப்பிய நாடொன்றிற்கு சட்டபூர்வமாக செல்வதற்கு அரியவாய்ப்பு



யாழ்.நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

தீபாவளியை முன்னிட்டு நவநாகரிக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்



# Style Park
Perfect Collection

# ஸ்ரைல் பார்க்



முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்

அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383 இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# இங்கேயும் பறவைக்காய்ச்சல் பயம் கோழி இறைச்சி விற்பனை வீழ்ச்சி!

வலி.தெற்கு.ஒக்.26

பறவைக்காய்ச்சல் நோய் பரவி வருவதாக செய்திகள் வெளியானதை அடுத்து குடாநாட்டு மக்களில் பலர் கோழி இறைச்சி உண்பதை தவிர்த்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோழிப் பண்ணைகளில் கோழிகளின் விற்பனையும் வீழ்ச்சி கண்டிருப்பதாக கோழிப் பண்ணையாளர்கள் சிலர் தெரிவித்தனர்.

குடாநாட்டில் கோழி முட்டையின் விலையிலும் கூட வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கோழி முட்டை ஒன்று தற்போது ஆறு ரூபா வரையில் விற்பனையாகி வருகிறது.

பறவைக்காய்ச்சல் நோய் உடனடியாக இலங்கைக்குப் பரவும் வாய்ப்பு இல்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நோய் பரவுவதற்கான தடுப்பு முறைகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. எனினும், பறவைக் கூட்டங்கள் நாடுவிட்டு நாடு வரும் காலம் இது என்பதால் மக்களை விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டுப் பறவைகள் குடாநாட்டு நீர்நிலைகள் நோக்கி வலசை போகும் காலம் இது வாகும்.

(ஐ-152)

## சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டி

வலி.தெற்கு.ஒக்.26

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் கலந்துகொள்ளும் சமூகக்கல்வி தொடர்பான ஆக்கத்திறன் போட்டியும் கண்காட்சியும் விரைவில் நடைபெறவுள்ளன.

இம்மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை வலய மட்டத்திலான ஆக்கத்திறன் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இப்போட்டி நடைபெறும்.

கோட்டமட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும், ஒவ்வொரு வகையிலும் வெற்றிபெற்ற ஐந்து மாணவர்கள் மேற்படி போட்டியில் பங்குபற்றமுடியும் என கல்வி முன்னேற்றத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா அறிவித்துள்ளார். (ஐ-152)



கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய 'பஞ்சாட்சரம் பா நாடகங்கள்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பேராசிரியர் சபா ஜெயராசாவிடமிருந்து டாக்டர் பஞ்சலிங்கம் நூலின் முதற்பிரதியை பெற்றுக்கொள்கிறார். கவிஞர் பஞ்சாட்சரம், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-204)

## அடுத்து வரும் வாரங்களில் மின்தடை பற்றி முன்னறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக அடுத்து வரும் வாரங்களில் சில பிரதேசங்களில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சாரசபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

அடுத்த மாதம் 5 ஆம் திகதி இணுவில் உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், மருத்துவபீடப் பிரதேசம், பொற்பதி, சங்குவேலி ஆகிய இடங்களிலும்-

அடுத்த மாதம் 12ஆம் திகதி கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் 19 ஆம் திகதி உரும்பிராய், கோண்டாவில், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதியிலும் மின் தடை இருக்கும்.

அடுத்த மாதம் 26 ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர் பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும்-

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ-202)

# யாழ்., நல்லூர், கோப்பாய் கோட்டங்களில் 436 பேர் மட்டுமே புலமைப்பரிசில் சித்தி

அச்சுவேலி,ஒக்.26

யாழ்.கல்வி வலயத்தில் 436 மாணவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

யாழ்.கல்வி வலயத்தில் உள்ளடங்கும் யாழ்.கல்விக்கோட்டம், நல்லூர் கல்விக் கோட்டம், கோப்பாய் கல்விக் கோட்டம் ஆகியவற்றில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மொத்தம் 3ஆயிரத்து 286 மாணவர்களில் 436 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

யாழ்.கல்விக் கோட்டத்தில் இருந்து ஆயிரத்து 112 மாணவர்கள் தோற்றினர். இவர்களில் 160 பேர் சித்தியடைந்துள்ளனர். நல்லூர் கல்விக் கோட்டத்தில் இருந்து ஆயிரத்து 205 மாணவர்கள் தோற்றினர். இவர்களில் 223 பேர் சித்தியடைந்துள்ளனர். கோப்பாய் கல்விக் கோட்டத்தில் இருந்து 969 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களில் 53 பேர் சித்தியடைந்துள்ளனர்.

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள 90 பாடசாலைகளில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியிருந்தபோதிலும் 41 பாடசாலைகளில் இருந்து எந்த ஒரு மாணவரும் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-11)




## யாழ். கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் டீசல் விநியோகம்

அரியாலை,ஒக்.26

முற்றவெளிப் பகுதியில் அமைந்திருக்கும் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் தற்காலிக ஏற்பாடாக வாகனங்களுக்கு நேற்றுத் தொடக்கம் டீசல் விநியோகிக்கப்பட்டு வருகிறது என்று சங்கத்தின் உபதலைவர் எஸ்.ரி. கணநாதன் தெரிவித்தார்.

எரிபொருள் நிலையத்தின் புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் யாவும் முடிவுற்ற பின்னரே ஏனைய எரிபொருள்கள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

## சேறும் சகதியுமாகக் காட்சி தரும் மருதனார்மடம் பொதுச் சந்தை

வலி.தெற்கு,ஒக்.26

மழைகாலம் ஆரம்பமாகியதை அடுத்து மருதனார்மடம் பொதுச்சந்தைப் பகுதி சேறும் சகதியும் நிறைந்து வெள்ளம் தேங்கி நிற்கும் இடமாகக் காட்சியளிக்கின்றது.

தினமும் பெரும் எண்ணிக்கையான கள் கூடி பொருள் கொள்வனவு- விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இப்பொதுச் சந்தையின் சீரழிந்த நிலையால் மக்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர்.

சந்தையின் தெற்குப் பக்கமாக அமைந்துள்ள கீரைச் சந்தைப் பகுதி வெள்ளம் நிறைந்து காணப்படுகின்றது. கீரைவிற்பனையாளர் விற்பனைக்கென கொண்டு வரும் கீரைச் சாக்குகள் வெள்ளத்தின் நடுவில் வைத்தே விற்கப்படுகின்றன.

நான்கு பக்கத்தாலும் வந்து சேரும் அழுக்கு நீரினால் மரக்கறிகளில் நோய்க்கிருமிகள் தொற்றும் வாய்ப்பும் உள்ளது.

சந்தைக் கட்டடத்தின் நடைபாதைகளில் வாழைச்சருகுகளும் பழுதான மரக்கறிகளும் சேறும் மண்ணும் சேர்ந்து சந்தைக்கு வருவோரை சறுக்கி விழவும் வைக்கின்றன.

சுற்றுப்புற சூழலில் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படும் இக்காலத்தில் சந்தைப் பகுதி இவ்வாறு சீர்கெட்டநிலையில் காணப்படுவதையிட்டு மக்கள் கவலை கொண்டுள்ளனர். உரிய அதிகாரிகள் சந்தையின் சுத்தம் பேணுவதில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

(ஐ-152)

## யாழ். விவசாயிகளுக்கு நவம்பரில் விதை உருளைக்கிழங்கு

அச்சுவேலி,ஒக்.26

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழக்கு கமநல சேவை நிலையங்கள் ஊடாக அடுத்த மாத முற்பகுதியில் விநியோகிக்கப்படவுள்ளது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'டிசிறி', 'அனோவா' இன விதை உருளைக்கிழங்குகளே இம்முறை விநியோகிக்கப்படவுள்ளன.

50 கிலோ விதை உருளைக்கிழக்கு கொண்ட பெட்டி ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் முற்பணம் செலுத்தி கமநல சேவை நிலையங்களில் விவசாயிகள் பதிவுசெய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முற்பணம் செலுத்திய விவசாயிகளுக்கு நவம்பர் மாதம் முதல் வாரத்தில் விதை உருளைக்கிழங்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கமநல கேந்திர நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-11)

## பல்கலைக்கழக கல்வி அனுமதி விளக்கக் கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,ஒக.26

லண்டன் நொதம்பியா பல்கலைக்கழ்கத்தில் அனுமதி பெறுவது தொடர்பாக விளக்கமளிக்கும் கருத்தரங்கு ஒன்று இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் றோட்டறக்ட் கழகமும் என்.ஐ.ஐ.ரி கணனிக் கல்வி நிறுவனமும் இணைந்து இக் கருத்தரங்கை நடத்தவுள்ளன.

இக் கருத்தரங்கில் விளக்கம் அளிப்பதற்கென சர்வதேச அபிவிருத்தி கணனியியல் கல்லூரியின் பொறியியல் துறை மற்றும் தகவல் விஞ்ஞானத்துறைத் தலைவர் டாக்டர் ஜெறிஹெடென் லண்டனிலிருந்து வருகை தரவுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள எவரும் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-202)

## இரண்டு ஆலயங்களில் ஒரே இரவில் கூரை பிரித்துத் திருட்டு!

அச்சுவேலி,ஒக்.26

ஒரே இரவில் இரண்டு ஆலயங்களில் திருட்டு நடைபெற்றுள்ளது. நவக்கிரி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலும் ஈவினை மீனாட்சி ஆலயத்திலும் கூரையைப் பிரித்து உள்ளே புகுந்து திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆலயப் பாவனையில் உள்ள நகைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருடப்பட்டுள்ளன.

(ஐ-11)

ஒக்டோபர் – வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
காலவதியான ஆசிரியர் என்றநிலையில் இருந்து உயிர்த்தெழ
வாசியுங்கள்
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி அன்ரனிராஜன்
தம்பதிகளின்
ஏக புதல்வன் செல்வன்
**றோச் டனிஸ்ரன்**
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி
பெற்றமையைப் பாராட்டி மேலும் பல
சித்திகளைப் பெற்றுயர்ந்து பல்லாண்டு
வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.பா.குகப்பிரசாதன், திரு.பி.கலாவதி-குடும்பம்,
(41940) (39-26-11-17) திரு.திருமதி சாயி ஜீவானந்தன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில்
கல்வி கற்கும் **ரகுநாதன்- வரகினி**
தம்பதியரின் செல்வப் புதல்வன்
செல்வன் **நிரோஜன்** அவர்கள்
2005 இல் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டுவதுடன் அவரை வழிநடத்திய அதிபர் , ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**அப்பப்பா, அம்மம்மா, மாமன்மார்.**

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (41955)(39-26-11-17)

## பாராட்டி வாழ்த்துகிறோம்




வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்டு நல்லாசிரிய ஆலோசகருக்கான விருதினைப் பெற்ற, எமது வலயக்கல்விப் பணிமனையில் கடமை புரியும்
**திரு.அ.கிருபானந்த மனுநீதி**
அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள், பதவியுயர்வுகள் பெற வாழ்த்துகிறோம்.

ஆசிரிய ஆலோசகர்கள்,
வலயக்கல்வி அலுவலகம்,
வடமராட்சி, புலோலி.

(41957) (39-26-11-17)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
26
-
06
-
1925



மறைவு
26
-
09
-
2005

### அமரர் தியாகராசா நவரட்ணம்

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (26.10.2005) புதன்கிழமை வல்லியானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''நவநாயகி இல்லம்'',
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

**பிள்ளைகள், மருமக்கள் குடும்பத்தினர்.**
தகவல்: **எஸ்.கிருஸ்ணராஜா (கிராம உத்தியோகத்தர்).**

(41958)(42-26-11-17)






## 58 விவசாயக் கிணறுகள் திருத்தியமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயக் கிணறுகளில் 58 கிணறுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் யாழ். மாவட்டத்தில் 77 விவசாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டன. இவற்றுள் 58 கிணறுகளை பட்டினிக்கு எதிரான நிறுவனம் திருத்தியமைத்துள்ளது.

ஏனைய கிணறுகளையும் திருத்தியமைப்பதற்கு கெயர், கரித்தாஸ் போன்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. (த-202-204)

## கடலை ஆழமாக்க நடவடிக்கை

நல்லூர்,ஒக்.26

நெடுந்தீவு துறைமுகப் பாலத்துடன் படகுகளை அணைக்கக் கூடியதாகப் பாலத்தை அண்டிய கடல் பகுதியை ஆழமாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை துறைமுகத்தில் உள்ள பயணிகள் தங்கும் மண்டபமும் விஸ்தரிக்கப்படவுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபை இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. (ஐ-111)

## புலமைப்பரிசில் பரீட்சை மேலும் சில பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.26

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியான முடிவுகள் உதயனில் தொடர்ந்து வெளிவருகின்றன.

மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு:-

**புலோலி கிழக்கு அ.த.க.**
வி.தவகுலரட்ணம் (137).

**பொலிகண்டி அ.த.க.**
ஆர்.கிறிஸ்ரியன் (134).

**தம்பசிட்டி மெதடிஸ்தமிசன்**
எஸ்.சுலக்ஷன் (132),
வி.ஜெயப்பிரசனா (140).

**மேலைப்புலோலி சிவப்பிரகாசா வித்தி.**
பி.டயாலினி (124), ஆர்.கர்சிகா (135), ஏ.ஜெயவதனா (127), எஸ்.சுதேசனா (141), எம்.மதியறாசனி (136), எஸ்.சுலக்சன் (142), கே.சுரேன் (142).

**கற்கோவளம் மெதடிஸ்தமிசன்**
எம்.சாலமன் (140).

**வல்வை அமெரிக்கன் மிசன்**
பி.அபிநயன் (145), எஸ்.ஜெயக்குமார் (131), ஆர்.லக்ஸியா (126).

**வல்வை றோ.க.த.க.**
ஜெஸ்லின் நித்தியறாணி சேவியர் (129), எஸ்.மதுகீர்த்தி (134).

**நீர்வேலி சி.சி.த.க.**
இராசரத்தினம் ஜானகி (148), பவளகாந்தன் பிரதீஸ் (138). (ஐ-12-70-11)

## சகலகலாவல்லி மனனப் போட்டி முடிவு

நவாலி,ஒக்.26

வடலியடைப்பு கலைவாணி அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சகலகலாவல்லிமாலை மனனப் போட்டி, தேவாரப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

மனனப்போட்டி: லோ.பபிதா, ந.பகீரதி, ம.சிவகௌரி.

தேவாரப் போட்டி: லோ.றகீலன், சி.யாதவன், ச.தாரங்கன்.

எழுத்துப் போட்டி: லோ.பபிதா, ம.சிவகௌரி, லோ.றகீலன். (ஐ-203-100)

## புத்தூர், உரும்பிராய்ப் பிரிவுகளில் 150 விவசாயிகளுக்கு விதைகள்

அச்சுவேலி, ஒக்.26

உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் கோப்பாய்ப் பிரதேசத்தில் 150 விவசாயிகளுக்கு மரக்கறி விதைகளும், அவற்றைச் செய்கை பண்ணுவதற்கான உரப்பசளையும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு விவசாயியும் 4 பரப்பில் செய்கை பண்ணக்கூடிய நல்லின மரக்கறி விதை வகைகளும், அவற்றுக்கான உரப் பசளை வகைகளும் இவற்றில் அடங்கும்.

உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் புத்தூர் கமநல சேவை பிராந்தியத்தில் உள்ள 75 விவசாயிகளுக்கும், உரும்பிராய் கமநல சேவை பிராந்தியத்தில் உள்ள 75 விவசாயிகளுக்கும் மரக்கறி விதைகளும் உரப்பசளையும் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக புத்தூர் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரன் தெரிவித்தார். (ஐ-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலிகள்

### அமரர் நவரத்தினம் முத்தம்மா

கடந்த 23.09.2005 அன்று தம்பிலுவிலில்
சிவபதமடைந்த எமது முதியோர் இல்ல
மருந்தக ஓடலி **திருமதி வண்ணமயில் சிவனேசமலர்**
அவர்களின் தாயார் **திருமதி நவரத்தினம் முத்தம்மா**
அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திப்பதோடு,
அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரச முதியோர் இல்லம், அத்தியட்சகரும், உத்தியோகத்தர்களும்,
கைதடி. (41965) (24-26-11-17) பணியாளர்களும்.

## எட்டாவது வருட நினைவுகள்

தோற்றம்
19
-
11
-
1930



மறைவு
24
-
10
-
1997

### அமரர் கார்த்திகேசு இரத்தினம் (சபா)

திதி:அபரபக்க நவமி (26-10-2005)

ஆண்டுகள் எட்டுச் சென்றதப்பா
ஆறவில்லை எம் கவலை
ஆசையுடன் வளர்த்தெம்மை
ஆளாக்கி வைத்த தெய்வம்
ஆறுமோ எம் கவலை.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(41943)(26-11-17)

## இதய அஞ்சலி

எமது நண்பன் க.சக்திகரன் (கரன்) அவர்களது
பாசமிகு தந்தை
**திரு.ச.கந்தசாமி**
அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கெடுத்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய். (41948)(26-11-17) நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

23-10-2005 இல் சிவபதமடைந்த எமது பாடசாலை ஆசிரியை
திருமதி பா.ஜெயக்குமார் அவர்களின் தாயார்
**திருமதி சின்னத்தங்கச்சி சின்னத்தம்பி**
அவர்களின் மறைவிற்கு எங்கள் அனுதாபங்களை அன்னாரின்
குடும்பத்திற்குத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(41964)(32-26-11-17)
அதிபர், ஆசிரியர்கள்,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பனும் கிளிநொச்சி
மத்தியகல்லூரி பழைய மாணவனுமாகிய
**கந்தசாமி வினோத்ராம்**
அவர்கள் 22-10-2005 அன்று அகால மரணமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளிநொச்சி. (41949)(26-11-17)
2004,2005 கணித-விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



### உயர்திரு. க.சி.குகதாசன்

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் க.சி.குகதாசன் அவர்கள் 1985 - 1990 காலப் பகுதியில் எமது கல்லூரிக்கு ஆற்றிய சேவையை நினைவுகூருவதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''ஆசிரிய சகோதரத்துவம்,''
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(41949)(26-11-17)

## மரண அறிவித்தல்

### கலாபூஷணம் வல்லிபுரம் பரமசாமி

[இளைப்பாறிய இசையாசிரியர்]

யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் வல்லிபுரம் பரமசாமி 24.10.2005 இல் கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
**திருமதி க.ஸ்ரீஸ்கந்தராஜா** [மகள் -இசையாசிரியை, கோ/கொள்ளுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை].
கலாவித்தகர். **திரு.ப.கிருபாகரன்** [மகன் -லண்டன்]


(41960)(62-26-11-17).
27/1, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

# புளோரிடாவைத் தாக்கியது 'வில்மா' வீடுகள் நீரில் மூழ்கின; மக்கள் அவதி!

மியாமி,ஒக்.26

கரிபியன் கடலில் உருவாகிய வில்மா சூறாவளி அமெரிக்காவின் புளோரிடா கரையோரங்களை கடுமையாகத் தாக்கியுள்ளது.

மணிக்கு 200 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளியுடன்



கடும் மழையும் பெய்தது. அத்துடன் பல மீற்றர் உயரத்துக்கு எழுந்த கடல் அலைகள் கரையோரத்தின் மீது கடுமையாக மோதித் தாக்கின.

புளோரிடாவின் தென்மேற்குப் பகுதி கரையோரப்பகுதிகளை கடுமையாகத் தாக்கிய சூறாவளியின் காரணமாக குறைந்தது 4 பேர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான வீடுகளும், வர்த்தக நிலையங்களும் மின்சாரம் இன்றி காணப்படுகின்றன. முக்கிய மின்சார கம்பிகள் அறுந்து விழுந்துவிட்டதன் காரணமாக புளோரிடாவின் எவர் கிளாட்ஸ் நகரம் முற்றாக இருளில் மூழ்கியுள்ளது.

அப்பகுதிகளில் 25 சென்றி மீற்றர் உயரத்துக்கு மழை நீர் நிரம்பிக் காணப்படுகின்றது. புளோரிடாவின் கீ வெஸ்ட் என்ற கரையோரப் பகுதியும் கடும் மழை காரணமாக நீரில் மூழ்கியுள்ளது.

ஏற்கனவே, பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிவிட்டனர். எனினும், பலர் தமது வீடுகளிலேயே தொடர்ந்தும் தங்கியுள்ளனர். சூறாவளி மியாமித் தீவையும் கடுமையாகத் தாக்கியது.

'வில்மா' சூறாவளி மெக்ஸிகோவின் கரையோரப் பகுதிகளையும், கியூபாவையும் தாக்கியதைத் தொடர்ந்து, தற்போது புளோரிடாவும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. சூறாவளி பாதித்த பகுதிகளில் மீட்புப்பணிகளுக்கு படைகள் தயாராகி வருகின்றன

புளோரிடாவில் சூறாவளி தாக்கும் பகுதிகளில் அவசரநிலைப் பிரகடனம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது சூறாவளி சற்று வலுக்குறைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)




# தமிழகத்தில் கடும் மழை; 40 பேர் பலி!

சென்னை, ஒக். 26

இந்தியாவின் தென் மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகம் ஆந்திரா உட்பட பல மாநிலங்களில் கடும் மழை பெய்து வருகிறது. கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக தமிழ் நாட்டில் 40 பேர்வரை உயிரிழந்துள்ளனர்; பல்லாயிரக்கணக்கான வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

காவேரி உட்பட முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது. இதனால், இப்பகுதிகளிலிருந்தும் பெருமளவு மக்கள் வெளியேறி வருகின்றனர். மீட்புப்பணிகளுக்காக இராணுவத்தை அழைப்பது குறித்தும் ஆலோசனை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மழை தொடர்ந்து பெய்து வருவதால் விவசாய நிலங்கள் பெருமளவு சேதமடைந்துள்ளன. மழையுடன் கூடிய இடி, மின்னல் காரணமாகவே பலர் உயிரிழந்துள்ளனர். இரண்டு நாட்களுக்கு மழை நீடிக்கும் என தமிழக வானிலை அவதான மையம் தெரிவித்துள்ளது. (க)

# ஈராக்கில் தொடர் குண்டுத் தாக்குதல்கள்!

பக்தாத், ஒக்.26

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் அமைந்துள்ள ஹோட்டல்களில் நேற்றுமுன்தினம் தொடராக நடந்த மூன்று வாகனத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த ஹோட்டல்களில் வெளி நாட்டு ஊடகவியலாளர்களும், வெளி நாட்டு ஒப்பந்தக்காரர்களுமே தங்கியிருந்தனர்.

இத்தொடரான மூன்று குண்டு வெடிப்புகளிலும் 17 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் ஹோட்டல் பாதுகாப்பு ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதனால் அமெரிக்கப்படைகளின் கவச வாகனம் ஒன்றும் முற்றாக அழிந்தது. இதில் அமெரிக்கப் படையினர் எவரும் இருக்கவில்லை.

இத்தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட ஈராக் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அல் றுபேய், தீவிரவாதிகள் ஹோட்டல்களில் இருந்த ஊடகவியலாளர்களை பணயக்கைதிகளாகப் பிடிக்கும் நோக்குடன் இத்தாக்குதலை மேற்கொண்டனர். எனினும், அது முறியடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் தீவிரவாதிகளால் 12 கட்டட ஒப்பந்தக்காரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களில் 5 பேர் சகோதரர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பக்தாத்தில் பொலிஸ் நிலையம் அருகே நடந்த மற்றொரு கார்க்குண்டுத் தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர்.

# ஈராக்கின் புதிய அரசமைப்பினை இரண்டு மாநிலங்கள் நிராகரித்தன

பக்தாத், ஒக். 26

ஈராக்கில் புதிய அரசமைப்புச் சட்டம் தொடர்பாக நடத்தப்பட்ட மக்கள் வாக்கெடுப்பில் சுனி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இரண்டு மாநிலங்கள் இந்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளதாக ஈராக் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி ஈராக்கில் புதிய அரசமைப்புச் சட்டம் குறித்து மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடைபெற்றது. இது தொடர்பான முழுமையான முடிவுகள் இன்று அல்லது நாளை வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெளிவந்துள்ள முடிவுகளின்படி 'சுனி' முஸ்லிம்கள் அதிகமாக வாழும் அல் - அன்பாரில் உள்ள வாக்காளர்கள் புதிய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர் என ஈராக் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அரசமைப்புச் சட்டத்துக்கெதிராக வாக்களிக்கும் இரண்டாவது 'சுனி' முஸ்லிம்கள் வாழும் மாகாணம் அல் - அன்பார் ஆகும்.

மூன்று மாகாணங்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதி வாக்காளர்கள் அரசமைப்புச் சட்டத்துக்கெதிராக வாக்களித்தால் அச்சட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியும்.

எனினும், 'சுனி' முஸ்லிம்கள் வாழும் மூன்றாவது மாகாணமான நின்வாவின் தேர்தல் முடிவுகளே இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்பின் இறுதி முடிவினைத் தீர்மானிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்மகிழ 06.03.1946

கண்ணெகிழ 26.09.2005

பொங்கிவரும் பெருநிலவாய்ப் பொலிந்த குலவிளக்கே
தங்கத்திரு வுருவேயாம் தாயான தெய்வமே
திங்களொன்று கடந்ததுவோ நம்பவே முடியவில்லை
பங்கயமே ஏன்சென்றாய் வந்தவிடு நம்மிடையே!

26.09.2005 அன்று எம் அன்னை இறை வனடி சேர்ந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி,பக்ஸ்மூலம் அனுதாபம் தெரிவித்த வர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட வர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வ துடன்

இன்று (26.10.2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வி லும், தொடர்ந்து நடைபெறும் மதியபோச னத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்
சுந்தரமூர்த்தி நற்குணவதி
(யோய்)
(யோய் பார்மசி - மானிப்பாய்)

இனுவில் வீதி,
மானிப்பாய்.
T.P:021-4591960

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. புறொயிலர் 180/-, கல்பேட்ஸ் 170/- மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. T.P.No. 0773256579, 0776245134. (சி-41930)

தரமான மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற்கற்கள், கொங்கிறீற் வேலித் தூண்கள், கட்டடத் தூண்கள், அலங்காரத் தூண்கள், அலங்கார பூங்கற்கள், பூச்சாடிகள் என்பன வேண்டிய அளவுகளில் விற்பனைக்குண்டு. தொடர்பு: அகிலன், 17, ஐயனார் கோயில் வீதி, (கெங்காதரன் வைத்தியசாலை அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 077 3144884. (40603)

சார்ப் புறொஜெக்ட் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. ஸ்ரீஸ்கந்தராசா, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு (கல்வாரிச் சேர்ச்சுக்கு அருகில்). (41799)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் மானிப்பாய் வீதியில் K.K.S. வீதிச் சந்திக்கு அருகில் 2 பரப்புக் காணியும் 4200 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமார் அல்லது கலா T.P. 011 2597183, 011 5364293. (சி-45692)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய்வீதிக்கு அருகில் பெரியமாவடியில் 6 பரப்புக்காணியில் கிணற்றுடன் கூடிய சிறிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு 0776590443, 077 9590658. (41865)

இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியில் இரண்டு பரப்புக்காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: S. பிறேம், T.P.No. 222 9201. (41959)

## AMERICAN VISA

அமெரிக்கா EDV - 2007 லொத்தர் விசா விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. விவரங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் தொடர்பு: 'சண் அங்கிள்' டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம். T.P. 0776315965. (சி-45921)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973ஆம் ஆண்டு சித்திரை நட்சத்திரம் கன்னி இராசி, 7இல் செவ்வாய் ஆட்சி பெற்றது. லண்டன் P.R உடைய படித்த அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. 30.10.2005 இற்கு முன்பாக நேரில் தொடர்பு கொள்ளவும். T.P. 077 6545146. (41945)

## தவறிவிட்டது

யோகலிங்கம் தருமநாதன் என்பவருடைய தற்காலிக வாகன அனுமதிப்பத்திரம் காப்புறுதிப் பத்திரம் என்பன 21.10.2005 அன்று வல்வெட்டித்துறைக்கும் இன்பருட்டிக்கும் இடையில் கடற்கரை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அறவழிப் போராட்டகுழுவின் அலுவலகங்களான கதிரவேற்பிள்ளை வீதி தம்பசிட்டியில் அல்லது நுணாவிலில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (41954)

சிதம்பரம் வேலுப்பிள்ளை என்பவருடைய உழவு இயந்திரப் புத்தகம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம், சிறுதொகைப் பணம் என்பன 24.10.2005 அன்று யாழ்ப்பாணத்திற்கும் கொடிகாமத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வரணி, இயற்றாலை, வரணி என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (41956)

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் (Allience Development Society)க்கு அருகில் நல்ல சூழலில் அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. N.G.O விற்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு:- Dr. அன்ரன் T.P. 021-2227075

(41961)

## பணியாளர்கள் தேவை

*மெடிக்கல் கிளினிக்கில் வேலை செய்வதற்கு முன்அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை.*

**தொடர்பு:**

**பிரவினா மெடிக்கல்ஸ் அன் டிஸ்பென்சரி,**

பிரதான வீதி, சித்தன்கேணி.

**தொலைபேசி: 0777 667516**
**0777 989364**

(சி/45927) (21-17-19-32)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

### நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ப. நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென எதிராகக் குறிப்பிட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரையுள்ளது) இருந்து கோரப்பட்டுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 ஒக்ரோபர் (MT) | 2005 நவம்பர் (MT) | 2005 டிசெம்பர் (MT) |
| 01. | சாவகச்சேரி | 75 | 75 | 75 |
| 02. | கைதடி | 30 | 30 | 30 |
| 03. | கொடிகாமம் | 80 | 80 | 80 |
| 04. | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 05. | கட்டைவேலி - நெல்லியடி | 15 | 15 | 15 |
| 06. | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 07. | புலோலி | 15 | 15 | 15 |
| 08. | மருதங்கேணி | 15 | 15 | 15 |
| 09. | யாழ்ப்பாணம் | 70 | 70 | 70 |
| 10. | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11. | அச்சுவேலி | 30 | 30 | 30 |
| 12. | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13. | மானிப்பாய் | 20 | 20 | 20 |
| 14. | பண்டத்தரிப்பு | 20 | 20 | 20 |
| 15. | அளவெட்டி - மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16. | தெல்லிப்பழை | 75 | 75 | 75 |
| 17. | சங்கானை | 50 | 50 | 50 |
| 18. | சுன்னாகம் | 40 | 40 | 40 |
| 19. | புங்குடுதீவு - நயினாதீவு | 20 | 20 | 20 |
| 20. | வேலணை | 25 | 25 | 25 |
| 21. | ஊர்காவற்றுறை | 25 | 25 | 25 |
| 22. | காரைநகர் | 20 | 20 | 20 |
| 23. | தீவகம் | 15 | 15 | 15 |
| 24. | நெடுந்தீவு | 10 | 10 | 10 |
| | மொத்தம் | 750 | 750 | 750 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.
03. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/- யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.10.26ஆம் திகதி தொடக்கம் 2005.11.10ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
04. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500/-ஐ அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
06. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களைத் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரச அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்டப் புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.11.11 பிற்பகல் 2 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம்பெற்ற பிரதிநிதி சமூகமளிக்கமுடியும்.
07. கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்கமேல் மூலையில் "**சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி**" என எழுதப்படல் வேண்டும்.
08. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்குத் தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாகச் செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
11. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாள்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

(சி/45928)
(24-19-21-17)

**க.கணேஷ்,**
தலைவர் / அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/ மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
24/09/2005

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




பருத்தித்துறை, யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் மாணவனும் திரு திருமதி தவராசா அருமைநாயகி தம்பதியரின் புதல்வனுமாகிய செல்வன் தவராசா சானுஜன் அவர்கள் 2005ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்றுச் சிறப்புச் சித்தியடைந்துள்ளார். இவர் வடமராட்சி வலயத்தில் முதலாம் இடத்தையும் யாழ்.மாவட்டத்தில் 3ஆம் இடத்தையும் தமிழ்மொழிமூலம் தேசிய ரீதியில் 7ஆம் இடத்தையும் பெற்றுள்ளதையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு, இவர் மென்மேலும் பல சிறந்த பெறுபேறுகளைப் பெற இறைவனை வேண்டுகின்றோம். அத்துடன் இவருக்கு கல்வியறிவூட்டிய **பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பாசிரியை செல்வி ஏ.யசோதரா அவர்களுக்கும் வசந்த மலர்கள் கல்வி அகம், பருத்தித்துறை ஆசிரியர் C.V தங்கவடிவேல் அவர்களுக்கும்** மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*நிரந்தர முகவரி:*
சுடத்தனை வடக்கு, சுடத்தனை.
*தற்போதைய முகவரி:*
கல்லடி ஒழுங்கை,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

*வாழ்த்துவோர்:*
**அப்பா, அம்மா,**
**அண்ணன்மார்,**
**அப்பி, அப்பம்மா.**

(சி-45923)(42-17-19-21)

# போட்டிப் பரீட்சை வகுப்புகள்

**S.L.A.S**
**S.L.E.A.S**
**S.L.P.S. II, III**

இவற்றுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் 16.10.2005இல் ஆரம்பமாகி விட்டன. பிரிவு I மட்டும் நடைபெறும்.

**சனி, ஞாயிறு 2.00 மணி**

*ஆசிரியர்கள்*
கிரகித்தல்: பேராசிரியர் சண்முகதாஸ்
நுண்அறிவு: திரு. குமாரவேல்
கல்வி நிர்வாகம்: திரு. நல்லையா
(Rd. மேல்மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்)

**புதிய உயர் கல்லூரி,**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

(41968)
(17-19-21)

## கொழும்பு மொத்த விலையில்!

*அனைத்து ரகப் புடைவைகளையும் பெற்றுக்கொள்ள!!*

**சீமாட்டி புடைவைக்கடல்**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/45930) (21-19-17-19)

# மரண அறிவித்தல்

## க.சி. குகதாசன்



(முன்னாள் அதிபர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, தலைவர் FWC தொண்டைமானாறு, பிரபல உயிரியல் நூல் ஆசிரியர், சூழலியலாளர், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட சபை அங்கத்தவர்)

கரவெட்டி கிழக்கு, பெரிய தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 70 /10 ,அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய க.சி.குகதாசன் (குகன்) காலமானார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி - பொன்னாச்சி ஆசிரியர் தம்பதிகளின் ஏகபுதல்வனும் திருமதி செல்லம்மா சிவப்பிரகாசத்தின் அன்புச் சகோதரரும் அன்னலஷ்மியின் அன்புக் கணவரும் அமரர்களானஆசிரியர் மயில்வாகனம் - பொன்னாச்சியின் அன்பு மருமகனும் நந்தகுமார் (Engineer, முன்னாள் பணிப்பாளர் IT Park), Dr. நந்தகோபாலன் (Oncologist - USA), திருமதி நந்தினி மகிதரன் (M.Sc. UK), திருமதி தேவகி மனோகரன் (M.Music - UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி ஜெயராணி நந்தகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்),அருணா நந்தகோபாலன்(M.Sc. USA), Dr.மகிதரன்(Consultant Engineer - UK), மனோகரன்(M.Sc. UK) ஆகியோரின் மாமனாரும் அமரர் N.சிவப்பிரகாசம், Dr.முருகேசம் பிள்ளை (கல்முனை), சிவராசா, திருமதி சரஸ்வதி, திருமதி மகேஸ்வரி நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாரண்யா, சானுஜா, சைலஜா, துளசி, செந்தூரன், ஆதிரை ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.10.2005) வியாழக்கிழமை அவரது யாழ்ப்பாண வதிவிடத்தில் நடைபெற்று, முற்பகல் 11 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**70 /10 அரசடி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
T.P. No. 222 3171

தகவல்:
**நந்தகுமார்**
(மகன்).

(சி/45973)(21-19-17)

# போக்குவரத்துக்கு இடைஞ்சலான பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டன



யாழ். நகரில் வீதிக்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வியாபார நிலையங்களின் பெயர்ப்பலகைகள் மாநகர சபை ஊழியர்களால் அகற்றப்பட்டன.

நேற்றுகாலையும் மாலையும் மாநகர சபை ஊழியர்கள் நகரப்பகுதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் காணப்பட்ட பெயர்ப் பலகைகளை பெயர்த்தெடுத்து டிராக்டரினுள் நிரப்பி மாநகர சபை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றனர்.

ஆஸ்பத்திரிவீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, கே.கே.எஸ். வீதி போன்ற போக்குவரத்து நெருக்கடி நிறைந்த வீதிகளிலேயே இந்தப் பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்டன. போக்குவரத்துப் பொலீஸாரும் உடன் நின்றனர்.

# வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகம்!

யாழ்ப்பாணம்,ஒக்.26

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் யாழ்.மாவட்டத்தில் இன்று தொடக்கம் விநியோகிக்கப்படவிருக்கின்றன.

இத்தகவலைத் தெரிவித்தார் யாழ்.பிரதம தபாலதிபர் கே.ஞானலிங்கம். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக் காக மக்கள் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டைகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் இருந்து யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிர தேச தபாலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள் ளன.

இன்று 26 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 9ஆம் திகதி வரை தபாலக ஊழியர்கள் வாக்காளர் அட் டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் பணியில் ஈடுபடுவர்.

குறிப்பிட்ட நாள்களில் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் தமது பிரதேச தபாலகங்களுக்கு நேரடியாகச்சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (ஒ-7)

# விவசாயத் திணைக்களத்தினால் சிறந்த விவசாயிகள் தெரிவு

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதுவரை பிரதேச ரீதியில் 72 விவசாயிகள் சிறந்த விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட ரீதியில் சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்யும் வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும்மறுநாள் சனிக்கிழமையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.இதற்கான விசேட குழுக்களை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நியமித்துள்ளது.

மாவட்ட ரீதியில் 8 சிறந்த விவசாயிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதில் பின்வரும் பிரிவுகளில் தெரிவு இடம்பெறும்.

* சிறந்த திராட்சை உற்பத்தியாளர்.
* சிறந்த மாமரச் செய்கையாளர்.
* சிறந்த வாழை செய்கையாளர்
* சிறந்த கொள்கலன் விவசாயச் செய்கையாளர்
* சிறந்த பாரம்பரிய தானியச் செய்கையாளர்.
* சிறந்த நடுகைப் பயிர்ச் செய்கையாளர்.
* சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்.
* சிறந்த தேசிச் செய்கையாளர்.

சிறந்த விவசாயிகளாகத் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் விரைவில் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் நடத்தப்படும் என்று விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ-12)

# பயிலுநர் அல்லாத பட்டதாரிகளுக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.26

பயிலுனர் அல்லாத பட்டதாரிகளின் கையெழுத்துடன் கூடிய விவரங்கள் உடனடியாக கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதால் யாழ். மாவட்டத்திலுள்ள பயிலு னர் அல்லாத பட்டதாரிகள் சகலரையும் இன்று காலை 7 மணிக்கு யாழ். கல்வி வலயம் முன் பாக ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இன்று தமது பதிவுகளை உறுதிப்படுத் தாத பட்டதாரிகளின் நியமனங்கள் தொடர்பாகப் பின்னர் உரிய நடவடிக்கைகள் எடுக்க முடியாமல் போய்விடும் என்பதால் சம்பந்தப் பட்ட பட்டதாரிகள் அனைவரும் இன்று காலை கல்வி வலயப் பணிமனைக்கு முன்பாக் சமுகமளிக்க வேண்டும் என்று பயிலுனர் அல்லாதபட்ட தாரிகளின் செயற்குழு சார்பில் தெரிவிக்கப்பட்டது (த)

# சர்வோதயத்தின் பயிலரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.26

கொழும்பு மனிதநேய அமைப்புகள் கூட்டமைப்பின் அனுசரணையுடன் வடஇலங்கை சர்வோதயம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்திட்டப் பயிலரங்கு எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு புங்குடுதீவு வடஇலங்கை சர்வோதய சேவை வளாகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதில் சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள், சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் நூல்கள் வாசிப்பின் முக்கியத்துவம் ஆகிய தலைப்புக்களில் கருத்துரைகளும் சமாதானம் பற்றிய கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-204)

# உள வளத்தின நிகழ்வு

பெண்கள் வலுவூட்டல் சமூக நல அமைச்சின் அனுசரணையுன் யாழ்.பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் தேசிய உளவளத்துணை நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அகவொளி குடும்ப உளவத்துணை நிலையத்தில் நடைபெறும். (3-8)

## மரண அறிவித்தல்கள்

### பஞ்சரத்தினம் பரமேஸ்வரி

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்தவரான பஞ்சரத்தினம் பரமேஸ்வரி நேற்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பஞ்சரத்தினத்தின் அன்பு மனைவியும் வாகீசனின் அன்புத் தாயும் நெல்லியடி முதல் வியாபார ஸ்தாபகர் காலஞ்சென்றவர்களான குமாரசாமி கந்தவனம் - நல்லநாயகி தம்பதியரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2005) புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று , பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விண்மீன் அங்காடி, நெல்லியடி,
கந்தவன வாசா, (45645)
நவிண்டில்,கரவெட்டி. (18-45-12-13)

தகவல்:
ப.வாகீசன்(மகன்)
சகோதர , சகோதரிகள்.

### துரையப்பா துரைராஜசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற காசன்ஸ்கொம்பனி கணக்காளர் துரையப்பா துரைராஜசிங்கம் நேற்று (25.10.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி துரையப்பாவின் அன்பு மகனும் திருமதி இராசம்மாவின் அன்பு மருமகனும் கோபாலகிருஸ்ணனின் மைத்துனரும் குணராஜசிங்கம்(யாழ். பல்கலைக்கழகம்); ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களான சறோஜினி, குமாரகுலசிங்கம், றஞ்சினி, சிற்றாஜினி ஆகியோரின் அன்பு தந்தையும் ஜெகதீஸ்வரி, மகேந்திரன், சுபா, மோகன், றாஜ் ஆகியோரின் மாமனும் றஞ்சிவ் (கனடா), வேணி(மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்), ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களான சாலினி, லக்சாயினி, சிந்து, றங்கன், லக்ஸ்மி, ஆனந் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லோட்டன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (26.10.2005) புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்ரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் வீதி,
மானிப்பாய். (41988)(18-45-12-13)

தகவல்:
மனைவி, மக்கள்.

### திருமதி பிரகாசம் பவளராணி



மயிலணி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரகாசம் பவளராணி அவர்கள் 24.10.2005 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் (தங்கம்மா) தம்பதியரின் செல்வப் புதல்வியும் பிரகாசம் (ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா பொலீஸ்) அவர்களின் அன்பு மனைவியும் சிவநேசன், சந்திரபோஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயந்தி, ஜலந்திரன், ஜயசீலன்(சீலன்), ஜெயவதனன் (செல்வம்), துர்க்காதரன்(துர்க்கன்), கஜவர்ணன் (கஜன்) ஆகியோரின் பாசமிகு தாயும் கிரிகரன் (769 சிற்றூர்தி சங்க உப தலைவர்), நந்தகுமாரி, கௌரி, தவரஞ்சி, வரதராணி, பரிமளா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2005) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது மகள் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி,
சுன்னாகம். (41986)
(18-12-45-13)

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### சிற்றம்பலம் புவனேஸ்வரி

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்றம்பலம் புவனேஸ்வரி 23.10.2005 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் மனைவியும் காலஞ்சென்ற தம்பித்துரை - பூரணம் தம்பதியரின் மருமகளுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.10.2005)புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முன்பள்ளி லேன்,
ஊரெழு கிழக்கு,ஊரெழு. )

தகவல்:
தம்பித்துரை செல்வநாயகம்
(45895 (18-17-34

## பிறந்தநாள் வாழ்த்து



மீசாலை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த நவரத்தினம் பத்மாவதி தம்பதியரின் அன்பு மகள்

**கிரிசாந்தி (சாந்தி)**

தனது 23 ஆவது பிறந்ததினத்தை இன்று (26.10.2005) புதன்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.இவரை அன்பு அப்பா, அம்மா, கனகரட்ணம் பெரியப்பா (C.T.B.), பெரியம்மா, ராசா சித்தப்பா, சித்தி, சிவானந்தன் சித்தப்பா, சித்தி (C.T.B.), மாமன்மார், மாமிமார்கள், உற்றார், உறவினர்கள், நண்பிகள் பல்லாண்டு காலம் சகல வளங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(41983) (18-12-45-13)

மீசாலை வடக்கு, மீசாலை.

V.K. நாதன்
C.E.B சாவகச்சேரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**பிரபாகரன் மகிழ்ராஜ்**



செல்வன்
**பஞ்சலிங்கம் மதீசன்**

யா/வேலணை ஐயனார் வித்தியாலய மாணவர்கள் செல்வன் பிரபாகரன் மகிழ்ராஜ் அவர்களும் செல்வன் பஞ்சலிங்கம் மதீஸன் என்பவரும் 2005 ஆண்டு நடந்த 5 ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு பாராட்டுவதோடு, இவர்களை வழி நடத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர், கல்வி நிலையங்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

துறையூர்,
6 ஆம் வட்டாரம் ,
வேலணை.

(41979)
(18-12-45-13)

ஐ.தனஞ்செயன்
குடும்பத்தினர்
(மாமா).


**ராஜா** யாழ்ப்பாணம்

சூர்யா, அஸின், நயன்தாரா நடித்த

**கஜினி**

காட்சிநேரம்:- பு.நே.
10.30, 2.30 , 6.30 மட்டும்.

அடுத்த வெளியீடு: விக்ரம், அஸின், வடிவேல் நடித்த

**மஜா**

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த

**மழை**

காட்சிநேரம்:-
பு.நே. 11.00, 3.00, 7.00

**மனோகரா** யாழ்ப்பாணம்

பார்த்தீபன், வடிவேலு, லட்சுமிராய் நடித்த

**குண்டக்க மண்டக்க**

சிலதினங்கள் மட்டும்

28.10.05 முதல்
யாழ். மாவட்டத்தில்
முதல் முறையாக
DIGITAL ... SOUND
ஒலியமைத்துடன்

காலை 8.00 மணி
காட்சி காண்பிக்கப்படும்.
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்

**சிவகாசி**

காட்சிநேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே.)

(அ-45593)



இணுவில் பொது நூலகம் சன சமூக நிலையம் அபிவிருத்தி நிதிக்காக யாழ். நகரின் முன்னணி இசைக்குழுக்களான
ராஜன் இசைக்குழு, ராகம்ஸ் இசைக்குழு முதன் முதலில் ஒரே மேடையில் கலந்து கலக்கும்

**'மாபெரும் இசைச்சங்கமம்'**

இடம்:- யா/இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானம் காலம்:- 01.11.2005 செவ்வாய்க்கிழமை (தீபாவளி தினத்தில்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இசையால் வசமாவோம்.

| பிரதான அனுசரணை: | அன்னா தொழிலகம் இணுவில். | கணேசன்சென்ரர் இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக (தரமான புடைவைத் தெரிவுகளுக்கு ஒரே கூரையின் பிரமாண்டமான காட்சியறை) | K.R.S. நிறுவனம் கொழும்பு - யாழ்ப்பாணம் K.R.S.Food Product உலர் உணவு வகைகள் அனைத்திற்கும் நாடுங்கள். |
|---|---|---|---|

(அ-45937) (18-12-13-45)

## பிந்துனு...வெவப் படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டும் படுகொலை செய்தது.

முகாம் அதிகாரிகள் இதனைத் தடுக்க எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இனவாத ரீதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது அறிக்கையை ஒரு வருட காலத்தில் சமர்ப்பித்தது. எனினும், அது இன்றுவரை அரசால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

எனினும், அந்த அறிக்கையை இரகசியமாகப் பெற்றுக்கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அதனை நேற்று இந்தியத் தலைநகர் புதுடில்லியில் வெளியிட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே படுகொலைகளுடன் தொடர்பு பட்டவர்களுக்கு இலங்கை அரசு பதவி உயர்வுகளைக் கொடுத்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சக்மா குற்றஞ்சாட்டினார்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆசிய மனித உரிமைகள் தலைவர் சக்மா தெரிவித்ததாவது:-

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமிலிருந்தவர்களைத் தாக்க வெளியிலிருந்து ஒரு கும்பல் அழைத்து வரப்பட்டுள்ளது. அக்கும்பல் தன காடைத்தனத்தை கட்டவிழ்த்து விட்டு து.

இதைத்தடுக்க பாதுகாப்பு அதிகாரிகள் எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லை. மாறாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்துள்ளனர். அதிகாரிகள் இந்தப் படுகொலைக்கு உடந்தையாகவே செயற்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

பிந்துனுவெவ சம்பவத்தில் இருபத்து எட்டு தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் அனைவரும் குற்றம் நிரூபிக்க உரிய ஆதாரம் இல்லை எனத் தெரிவித்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் சக்மா குறிப்பிட்டதாவது:-

இந்தப் படுகொலையுடன் தொடர்புபட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படவில்லை. அவர்களுக்கு அரசு உயர்பதவிகளை வழங்கியுள்ளது.

நாம் இது தொர்பில் ஐ.நா. மனித உரிமைக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளோம் - என்றார்.

இப்படுகொலை இடம் பெற்று ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. இது தொடர்பிலான ஆணைக்குழுவின் அறிக்கையை இரகசயக் காப்புச் சட்டத்தின் கீழ் இலங்கையில் வெளியிட முடியாது. அதனாலேயே புதுடில்லியில் வெளியிடுகிறார்கள் எனத் தெரிவித்தனர் ஏற்பாட்டாளர்கள். (க-3)

## ராணுவத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேகாவுக்கு அடுத்த இராணுவத் தளபதியா கும் வாய்ப்புக் கிட்டாமல் போகலாம் என இரா ணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் ஒழுங்குவிதிகள் தொடர்பான ஏற்பாடுகளில் சில மாற்றங்களுக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கின்றார் எனத்தெரியவருகின்றது.

இதன்படி, முப்படைகளிலும் அதிகாரிகள் தரவரிசையில் சேவையாற்றுவோரின் பணிக்காலத்தை மேலும் நீடிப்பதற்கான வாய்ப்புக் கிட்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தொட்டிருந்தது. இதனை அவதானிக்காத பெண்கள் இருவரும் அன்ர னாவை நிமிர்த்தும் நோக்குடன் அதனைப் பிடித்த வேளை மின்சாரத்தினால் தாக்குண்ட னர் என்று தெரிவிக்கப்பட்டது.

மின்சாரத்தால் தாக்குண்ட பெண்களின் அலறலைக் கேட்ட அயலவரான ஏ.டபிள்யூ. முஜீப் இருவரையும் காப்பாற்ற முயன்ற போது அவரும் மின்சாரத்தால் தாக்கப்பட்டார். ஆபத்தான நிலையில் அவர் மன்னார் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் பிரேதப் பரிசோதனைக்காக மன்னார் தேசிய வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க-3)

## பிரதமர் மஹிந்தாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதாரண, பிரதிச் சபாநாயகர் கீதாஞ்சன குணவர்தன, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா உட்பட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா இங்கு மேலும் கூறியிருப்பதாவது-

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வைக் காண்பதுதான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை. இனவாத சிந்தனைகளுக்கு இடங்கொடாமல் இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்பட்டு வருகிறது. ஆனாலும் எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேசியப் பிரச்சினைகளுக்கான தீர்வு யதார்த்தமானதல்ல. ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற கூறுவது வேடிக்கை. புலிகள் இதனை ஒருபோதும் ஏற்கமாட்டார்களென்பது திண்ணம்.

பிரதமருக்கு எதிராக நான் விமர்சனங்களை வெளியிடுகின்றேன் எனக்கூறப்படுகின்றது. பிரதமரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடுவதற்க இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் அது என்னிடம் வழங்கப்பட்டது. இறுதிசெய்யப்படாத அந்தப் பிரதி நான் வெளிநாட்டிலிருக்கும்போது எனக்கு அனுப்பப்பட்டது. இதனை நான் ஆராய்ந்து கொண்டிருந்தபோது அதுபற்றி கலந்தாலோசிப்பதற்காக தொலைபேசியூடாக சில முக்கிய அமைச்சர்களைத் தொடர்புகொண்டேன். அப்போது இந்த விஞ்ஞாபனத்தை அச்சிடுவதற்கான பணிகள் இடம்பெறுவதை அறிந்தேன். அதன் பின்னர் எவ்வாறு நான் இதனை பரிசீலிக்க முடியும்? பரிசீலித்துதான் என்ன பிரயோசனம்? அதேவேளை, இறுதியாக அச்சிடப்பட்ட 'மஹிந்தவின் சிந்தனை' பிரதி இன்னமும் எனக்கு பிரதமரால் வழங்கப்படவில்லை. மறுபுறம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருக்கும் ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் இறுதி செய்யப்பட்ட பிரதியை நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் எனக்கு அனுப்பிவைத்தார்.

பிரதமர் ஏன் இவ்வாறு நடந்துகொள்கிறார்? இங்கே என்னிடம் நன்றாகத் கதைத்து விட்டு மறுபுறம் வெளியில் சென்று என்னைப் பற்றி அவதூறாகப் பேசுகிறார்.

கட்சியின் கொள்கைகளைத் தாரை வார்த்து இனவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள மஹிந்த விற்கு ஆதரவாக நான் என்ன செய்யமுடியும்? பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்சித் தலை வர்களாகிய நீங்கள்ளே இதற்குப் பதில் கூற வேண்டும். இதற்கு உரிய தீர்வை கட்சித் தலை வர்களாகிய நீங்கள் கூறினால் அதற்கேற்ப செயற்பட நான் தயார்.

இப்போது மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள இனவாத யோசனைகளை ஆதரித்து என்னால் பொதுமேடைகளில் பேசமுடியாது. முதலில் இந்தக் கொள்கைகளை விடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை முன்வைத்து பிரசாரம் செய்வார் எனப் பிரத மர்எழுத்துமூல உத்தரவாதமொன்றைத்தந்தால் நான் அவரது அனைத்து பிரசார மேடைக ளுக்கும் செல்வேன். இல்லையேல் இன்னும் ஒரு பிரசாரக் கூட்டத்தில் மட்டுமே கலந்துகொள் வேன். இனவாதியாகப் பதவியிலிருந்து விலக நான் தயாரில்லை.

- இவ்வாறு அங்கு ஜனாதிபதி திட்டவட்டமாக கூறினார்.

நேற்றைய கூட்டத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமூகமளித்திருந்தபோதும், பிபி லையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் தாம் கலந்துகொள்ளவேண்டியிருப்பதாகத் தெரிவித்துவிட்டு ஆரம்பத்திலேயே அவர் எழுந்து சென்றுவிட்டார். பிரதமர் இக்கூட்டதில் இருந் திருக்கும் பட்சத்தில் பெரும் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டிருக்குமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரொரு வர் கூறினார். (க-3)

## தமிழர் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள தொலைமடலில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அண்மைக் காலமாக கொழும்பிலும் புறநகர் ப...யிலும் பொலீஸ் சாவடிகளில் தமிழர்கள் தே..வையற்ற பொலீஸ் சோதனைக் கெடுபிடிகளுக்கும் தொல்லைகளுக்கும் மீண்டும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளை அவசரகால விதிகளைப் பயன்படுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கை என்ற போர்வையில் பல தமிழ் இளைஞர்களும் , யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 21 ஆம் திகதி அம்பலாங்கொடை நகரில் அமைந்துள்ள புகையிரத வீதியில் உள்ள புடைவைக்கடை ஒன்றில் கொள்வனவு செய்த இரண்டு தமிழ் யுவதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இத்தனைக்கும் இந்த இரண்டு யுவதிகளும் அம்பலாங்கொடையில் ஒரு வியாபார ஸ்தாபனத்தில் கடைமைபுரிபவர்களும், அம்பலாங் கொடையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து பல மாதங்களாக அங்கு நிரந்தரமாகத் தங்கி வருபவர்களாகும்.

அதேதினம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை கலஹா நகரில் வைத்து நான்கு தமிழ் இளை ஞர்கள் எதுவித காரணுமின்றி கைதுசெய்யப்பட்டுத் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள னர்.

எனவே, இதுபோன்ற தேவையற்ற செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். இது போன்ற பாரதூரமான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தத்தவறும் பட்சத்தில் மீண்டும் 2002ஆம் ஆண்டுக்கு முன்பான இருண்ட அவசரகால அட்டூழிய நிலைக்குத் தமிழ மக்கள் தள்ளப்படுவார்கள் - இப்படி அவர் தெரிவித்துள்ளார். (3)

## புலிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பொலீஸார் அனுமதியின்றி எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழைந்தது தொடர்பாக தமிழீழ காவல்துறையின் புலன் விசாரணை தொடர்ந்து வருகிறது.

தமிழீழ குற்றவியல் நடைமுறைச் சட்டம் 94க்கு அமைவாக இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அனுமதியின்றி எமது நிர்வாகப் பகுதிக்குள் பொலீஸார் மூவரும் உள்நுழைந்தமைக்காக கூறும் காரணங்கள் ஏற்று கொள்ளக் கூடியதாக இல்லை. இவர்கள் கூறும் காரணங்களில் சந்தேகம் உள்ளமையினால் புலன் விசாரணைகள் நடைபெறுகின்றன- என்றார்.

பொலீஸார் மூவருக்காக வாதிட்ட சட்டவாளர் எஸ்.வேலவர் வாதங்களை முன்வைத்தார்.

இருதரப்பு விவாதங்களையும் கேட்ட கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் சாதனா, மூன்று பொலீஸாருக்குமான பிணைக் கோரிக்கையை நிராகரித்ததுடன் தமிழீழ குற்றவியல் சட்டம் 94இன்படி தமிழீழ காவல் துறையினர் விசாரணையைத் தொடரும் படியும் எதிர்வரும் நவம்பர் 14ஆம் நாள் வரை பொலீஸாரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## கட்சிக்குள் தனக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சமயம் பிரதமர் பதவிக்காக அநுர கட்சியால் முன்மொழியப்பட்டார். ஆனால், ஹெல உறுமய, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுடன் மஹிந்த தேர்தல் உடன்படிக்கைகளைச் செய்துகொண்டதை அடுத்து அநுர அவருடன் முரண்பட ஆரம்பித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களிலும் அவர் ஈடுபாடு காட்டுவதில்லை. இதுவரை பிரதமரின் ஒரேயொரு பிரசாரக் கூட்டத்திலேயே அவர் கலந்துகொண்டுள்ளார். அதே நேரத்தில் பிரதமருக்கு எதிரான கருத்துக்களை ஊடகங்களுக்குத் தெரிவித்தும் வருகிறார்.

அவர் இப்படி நடந்துகொள்வது கட்சிக்குள் பலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் ஊடகம் ஒன்றிற்குப் பேட்டியளித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே, அநுர தொடர்ந்தும் இவ்வாறு நடந்து கொண்டால் பிரதமர் பதவிக்கு ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸவையே கொண்டுவர வேண்டியிருக்கும் என்ற சாரப்பட ஊடகம் ஒன்றிற்குப் பேட்டியளித்திருந்தார்.

அதேசமயம் கிராமிய மற்றும் சிறிய கைத்தொழில்துறை பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவலவும் அநுரவின் செயல்களைக் கண்டித்து அவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலும் அவர் அநுராவை விமர்சித்துள்ளார்.

இவற்றை அடுத்தே அநுரா கட்சிக்குள் தனக்கு எதிராகச் சதி இடம்பெறுகின்றது என்று தெரிவித்து ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளார். அந்தச் சதியில் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் மூவரின் பெயர்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அக் கடிதத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே, மற்றும் பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல ஆகியோரை அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

"என்னைப் பிரதமர் பதவிக்கு முன்மொழிந்த கட்சியின் முடிவை மாற்றும் அதிகாரம் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளேக்குக் கிடையாது. கட்சியின் ஏகோபித்த முடிவு அது.

"1975ஆம் ஆண்டு கட்டம் பஹிவையில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்திற்கு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு, காலில் வெறும் செருப்புடன் வந்தவர் ஜெயராஜ். அவருக்கு மேடையில் பேச நானே சந்தர்ப்பம் வழங்கினேன்."- என்று தெரிவித்துள்ளார் அநுர.

கட்சியில் அடையாளமே தெரியாது இருந்த யாரோ ஒருவரான பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல என்ற நபர் தன்னைப்பற்றி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் விமர்சனம் செய்கிறார் என்றும் தனது கடிதத்தில் காட்டமாகத் தெரிவித்துள்ளார் அநுர.

தன்னைக் பிரதமர் பதவிக்கான வேட்பாளர் நிலையில் இருந்து அகற்ற முடியாது என்று அக்கடிதத்தில் தெரிவத்துள்ள அநுர, ஜனாதிபதித் தேர்தலில் பிரதமரின் வெற்றியைத் தீர்மானிப்பவர்கள் மக்களே என்றும் கூறியுள்ளார்.

அதேநேரம், கட்சித் தலைவியும் தனது சகோதரியுமான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளும் பிரதமரின் பிரசாரக் கூட்டங்களில் மட்டுமே தான் கலந்துகொள்வார் என்றும் அநுர அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (க-3)

## குகதாசனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விப்பு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் நேற்று விடுக்கப்பட்டது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் போது இந்தக் கௌரவம் அவ ருக்கு வழங்கப் படும். (3-8)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் முத்துப்பிள்ளை

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலைப் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நாகலிங்கம் முத்துப்பிள்ளை நேற்று (25.10.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் இந்திராணி, தனபாலசிங்கம், பூபாலசிங்கம், குணபாலசிங்கம் (குணபாலு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகாக இன்று(26.10.2005) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
T.P.: 021 222 2558
(கணேசாதொலைத்தொடர்பகம்)

தகவல்:
தனபாலசிங்கம்,
குணபாலசிங்கம்
(பிள்ளைகள்).

(45989)(18-45-12-13)



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.